பொழிவு - 18
குவிப்பு - 10
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஒக்ரோபர் - 2015
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

## தமிழ் திருச்சபைக்கு ஓர் நற்செய்தி!

# யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் நியமனம்!



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் (வயது 67) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த எட்டு வருடங்களாக யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராகப் பணியாற்றிவந்த இவர் யாழ். மறைமாவட்டத்தின் 8ஆவது ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ் மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இளைப்பாறிச்செல்லும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி பிற்பகல் யாழ் ஆயர் இல்லத்தில் வெளியிட்டார்.

யாழ். மறைமாவட்ட ஆயராக 1992ஆம் ஆண்டு முதல் 2015 வரை 23 ஆண்டுகள் பணியாற்றிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருச்சபைச் சட்டப்படி தனது 75வது வயதில் 2013ஆம் ஆண்டு தன் பணி ஓய்வு விண்ணப்பத்தை உரோமாபுரிக்கு அனுப்பிவைத்தார். மேற்படி விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரை நியமித்துள்ளார். புதிய ஆயருடைய வாழ்வு மற்றும் பணி பற்றிய விரிவான தகவல்களை 12ஆம் பக்கத்தில் காணலாம்.



இளைப்பாறிச் செல்லும் யாழ் ஆயரும் புதிய யாழ் ஆயரும்

## இரக்கத்தின் யூபிலி ஆண்டில்

# கரு அழிப்புப் பாவத்தை மன்னிக்க எல்லாக் குருக்களுக்கும் விஷேட அதிகாரம்!

### திருத்தந்தை பிரான்சிஸ் அறிவிப்பு

வருகிற டிசம்பர் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் கிறிஸ்து அரசர் விழாவுடன் நிறைவடைய இருக்கின்ற இரக்கத்தின் யூபிலி ஆண்டில் உலகெங்குமுள்ள எல்லாக் குருக்களும் ஒப்புரவு அருட்சாதனத்தில் கருஅழிப்பு (abortion) பாவத்தை அறிக்கையிடுவோருக்கு மன்னிப்பு அளிக்கின்ற விஷேட அதிகாரத்தைக் கொண்டிருப்பர் என திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.

சாதாரணமாக கருஅழிப்புப் பாவத்தை மன்னிக்கின்ற அதிகாரம் எல்லாக் குருக்களுக்கும் கிடையாது. ஒரு ஆயர் அல்லது ஆயரால் பிரத்தியேகமாக இப்பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டு நியமிக்கப்படுகின்ற நிபுணத்துவம் வாய்ந்த குருக்கள் மட்டுமே கருஅழிப்புப் பாவத்தை மன்னிக்கும் அதிகாரமுடையவர்களாவர். ஏனைய குருக்கள் இப்பாவத்தை மன்னிக்க வேண்டுமென்றால் ஆயரிடமிருந்து தற்காலிகமாக விஷேட அனுமதியைப் பெறவேண்டும். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)


## இரக்கத்தின் யூபிலி ஆண்டில் அன்னை திரேசாவுக்குப் புனிதர் பட்டம்



ஏழைகள், அநாதைகள் குழந்தைகள் கைவிடப்பட்டோர் போன்றோருக்கு இரக்கம் காட்டி, அவர்களை அரவணைத்து இறை இரக்கத்தைக் காட்டிய அருளாளர் அன்னை திரேசாவுக்கு இவ்விரக்கத்தின் ஆண்டில் புனிதர் பட்டம் வழங்கப்படலாம் என வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன.

இவ்விரக்கத்தின் ஆண்டில் அன்னைக்கு புனிதர் பட்டம் வழங்குவது பொருத்தமானது என்பது பலரின் கருத்தாகும்.

# தன்னைப்போலவே காட்சியளித்த குட்டிக் குழந்தையைப் பார்த்து சிரிப்பை அடக்கமுடியாமல் தவித்த திருத்தந்தை!



அமெரிக்காவில் கால்பதித்துமுதல், ஒபாமாவின் வெள்ளை மாளிகையில் உரையாற்றியது, வீடிழந்த மக்களுடன் உணவு உட்கொண்டது என பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ், தனது பாணியில் - தன்னைப்போலவே உடையணிந்திருந்த குட்டித் திருத்தந்தையைப் பார்த்து சிரிப்பை அடக்கமுடியாமல் தவித்தார்.

காரில் நின்று, தன்னைப் பார்க்க ஆர்வமாக சாலையோரம் குவிந்திருந்த மக்களை நோக்கி கையசைத்துக்கொண்டிருந்த திருத்தந்தை, க்வின் மேடன் என்ற குழந்தை அவரைப்போல உடையலங்காரம் செய்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்துபோனார். பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகள் மத்தியிலும் அக்குழந்தையை வரவழைத்து முத்தம் கொடுத்து ஆசீர்வதித்தார்.

## உலக மறைபரப்பு ஞாயிறு ஒக்ரோபர் 18ஆம் திகதி




இவ்வாண்டு உலக மறைபரப்பு ஞாயிறு தினம் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. "துயரங்கள், சோதனைகள் மத்தியில் நற்செய்திக்கு சாட்சிகளாகத் திகழ்வோம்" என்னும் கருப்பொருள் இவ்வாண்டு முன்வைக்கப்படுகின்றது. மறையறிவிப்புக்காக இறைமக்கள் தமது செபங்களையும், பரித்தியாகச் செயல்களையும், நிதியுதவியையும் தாராளமாக வழங்கவேண்டுமென திருச்சபைத்தாய் எதிர்பார்க்கின்றாள்.

வழமையான உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் மறைபரப்பு ஞாயிறு நிதி சேகரிப்பு முயற்சிகளில் ஈடுபடுமாறு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் மன்னார் மறைமாவட்டப் பங்குத்தந்தையர்களையும், பங்கு மக்களையும் கேட்டுள்ளார்.

திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுடைய (Pontifical Mission Societies) மன்னார் மறைமாவட்ட இயக்குனர் அருட்திரு. ஏ. யூட் குரூஸ் அடிகளார் உலக மறைபரப்பு ஞாயிறு தின வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றார்.

# வங்காலைப் பங்கிலிருந்து இறைமீட்பர் சபைக்கு புதிய குரு



இறைமீட்பர் (Salvatorian) துறவற சபையைச் சார்ந்தவரும் மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலைப் பங்கு மகனுமாகிய அருட்சகோதரர் முடியப்பு வினோதன் பிரான்சிஸ் குலாஸ் அவர்கள் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருகோணமலை ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார். இவர் தனது முதல் திருப்பலியை 01.11.2015 அன்று காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குரு வினோதன் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. (புதிய குருவின் வாழ்க்கைக் குறிப்புக்களை 14ஆம் பக்கம் காணலாம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம்

யுத்தகாலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின்கீழ் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகள், தாம் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றமையை எதிர்த்து, கடந்த 12.10.2015 முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு, அநுராதபுரம், தும்பறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகள் இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்கீழ் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் நாம் விடுதலை செய்யப்படுவோம் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அந்த நோக்கம் நிறைவேறவில்லையென்றும், எனவே ஒரு முடிவுக்கு வரும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் கைதிகள் தெரிவிக்கின்றனர்.

"எமது விடுதலைக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளோம். எனினும் தற்போதுவரை எவையும் கருத்திற் கொள்ளப்படவில்லை. புதிய ஆட்சியாளர்களுக்கும், எமது விடுதலை தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தபோதும் அவர்களும் தொடர்ந்து பாராமுகத்துடனேயே இருக்கின்றார்கள். எனவே இறுதி முயற்சியாக இந்தச் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்" என்றும் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

"கடந்த காலத்தில் எமது விடுதலை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அத்துடன் எமது உறவுகள் நாடளாவிய ரீதியில் பல்வேறு கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியிருந்தனர். ஆனால் இன்றுவரை எமது விடுதலைக்கு எவ்விதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை" எனவும் அரசியல் கைதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"தினமும் சிறைகளில் முடங்கி வருந்துவதைவிடவும் வாழ்வா? சாவா? என இறுதி முயற்சியாக இந்தச் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். எனவே அனைத்துத் தரப்பினரும் எமது நியாயமான கோரிக்கையை கருத்திற்கொண்டு போராட்டத்திற்கு வலுசேர்க்குமாறு கோருகின்றோம்" எனவும் அரசியல் கைதிகள் குறிப்பிடுகின்றனர்.

தற்போது நாட்டில் நல்லாட்சி நோக்கிய பயணம் உருவாக்கப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தருணம் ஏற்பட்டுள்ளது. ஆகவே அதனை அரசாங்கம் தவறவிடக்கூடாது. அந்தவகையில் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பளிக்கப்பட வேண்டும். இக்கருமத்தை அரசாங்கம் தாமதிக்காது விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் எனப் பல்வேறு தரப்புக்களும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வருகின்றபோதிலும் அரசாங்கம் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதற்கான அறிகுறியைக் காணமுடியவில்லை. குறிப்பாக நாட்டில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்றும், பல்வேறு குற்றங்களை செய்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கடந்த 20 வருட காலமாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 200ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் அவர்களுக்கு ஒரு சட்ட ரீதியான தீர்வை அரசாங்கம் பெற்றுக் கொடுப்பதற்கு தயங்குவது கவலைக்குரிய விடயமாகும். இவர்கள் அனைவரும் யுத்தகாலத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள். இவர்களை 20 வருட காலமாகத் தடுப்புக்காவலிலே வைத்திருப்பது ஒரு நியாமற்ற செயற்பாடாகவே காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசாங்கத்திடம் சரணடைந்த முன்னாள் புலி உறுபினர்கள் புனர்வாழ்வு செயற்பாட்டின் பின்னர் விடுவிக்கப்பட்டநிலையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நிலையில் கடந்த 20 வருட காலமாக தடுத்துவைக்கப்பட்ட அரசியல் கைதிகளின் நிலைமை இவ்வாறு காணப்படுகிறமை கவலைக்குரிய விடயமாகும்.

எனவே இந்த விடயம் தொடர்பில் சிவில் அமைப்புக்களும் மத அமைப்புக்களும் அரசாங்கத்துக்கு அளுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். இந்தப்பிரச்சினை தொடர்ந்தும் நீடித்துக்கொண்டிருப்பதற்கு இடமளிக்காமல் மிகவும் விரைவில் இந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கு அல்லது சட்டரீதியான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,*
*அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,*
*மன்னா பதிப்பாசிரியர்*

# அர்ப்பண வாழ்வு ஆண்டு

### மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்

## கலையருவி நடாத்தும்

## குடும்ப அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் புத்தாக்கப் போட்டிகள்

"அர்ப்பண வாழ்வும் குடும்பமும்" என்ற மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் பணி மையப்பொருளை முன்னிலைப்படுத்தி எமது அருட்பணி மையத்தின் ஏற்பாட்டில் புத்தாக்கப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இது தொடர்பான அறிவித்தலை ஏற்கனவே பங்குத்தந்தையர்களுக்கு அறிவித்துள்ளோம்.

1. **கட்டுரைப் போட்டி** - 1000 சொற்கள்
2. **சிறுகதைப் போட்டி** - 1000 சொற்கள்
3. **கவிதைப் போட்டி** - தாளின் (A4) ஒரு பக்கத்தில் மட்டும் (மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ அமையலாம்).

- "அர்ப்பண வாழ்வும் குடும்பமும்" என்ற கருப்பொருளை மையப்படுத்தியதாகவே மேற்படி புத்தாக்கங்கள் (கட்டுரை, சிறுகதை, கவிதை) அமைய வேண்டும்.
- ஒவ்வொரு போட்டியிலும் மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படும்.
- சிறப்பான ஆக்கங்கள் மன்னா பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

குறிப்புக்கள் :- இப்போட்டிகள் மன்னார் மறைமாவட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டது.

- திறந்த போட்டியாக இருக்கும் - ஒருவர் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியும். பிரதிகள் தாளில் ஒரு பக்கம் மாத்திரம் அமைதல் வேண்டும்.
- முடிவுத்திகதி - 31.10.2015
- போட்டியாளர்கள் தங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் போன்றவற்றை பிறிதொரு தாளில் தெளிவாகக் குறிப்பிட்டு ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி : புத்தாக்கப் போட்டிகள், கலையருவி, 116/2, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்.
- தழுவல், மற்றும் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

## குடும்ப அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் நாடகப் போட்டிகள்

பங்கு மட்டத்தில் அல்லது துணைப் பங்கு மட்டத்தில் இந்த நாடகப்போட்டியில் பங்குபற்ற முடியும். முதல் மூன்று இடங்களைப் பெறும் நாடகங்களுக்கு விருதுகள் வழங்கப்படும். சிறப்பான நாடகங்கள் கலையருவியால் வருட இறுதியில் ஏற்பாடு செய்யப்படும் விழாவின்போது மேடையேற்றப்படும்.
சமூக நாடகமாக இருக்க வேண்டும்.
**மையப்பொருள் : 'அர்ப்பண வாழ்வும் குடும்பமும்'**
**நேரம் : 30 நிமிடங்கள்**

**விண்ணப்ப இறுதி நாள் : 20.10.2015**
**போட்டி நடைபெறும் நாள் : 31.10.2015 (சனி)**
**போட்டி நடைபெறும் இடம் : முருங்கன் பங்கு**

நாடகப் போட்டியில் பங்கெடுக்கும் பங்குகள் தமது விண்ணப்பங்களை ஒக்ரோபர் 20ஆம் திகதிக்கு முன்னர் பங்குத்தந்தையின் கையொப்பத்துடன் கீழே உள்ள எமது விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## ஆசிரியர்களின் அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் சிறப்புரைகள்

ஆசிரியர்களின் அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் நோக்கில் எமது மையத்தினால் ஆசிரியர்களுக்கான சிறப்புரைகள் வழங்கப்படுகின்றன "ஆசிரியர்களின் அழைப்பு, வாழ்வு, பணி" என்ற தலைப்பில் நிழற்படக் காட்சியின் (Multi Media - Power Point Presentation) உதவியோடு இந்த உரைகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து மத பாடசாலை ஆசிரியர்களுக்குமான இந்த ஒரு மணித்தியால உரையை பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்க விருப்பமுள்ள அதிபர்கள் பங்குத்தந்தை ஊடாகவோ அல்லது நேரடியாகவோ எம்முடன் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு;
அருட்திரு. நேசன், இயக்குனர், கலையருவி, 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்.
தொலைபேசி 023 – 2250789 / 023 – 3233276 / 077 – 7429811 மின்னஞ்சல் : nesanmnr@gmail.com

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### ஐப்பசி

01 - குழந்தை இயேசு திருவிழா - பாவிலுப்பட்டான் கட்டி குடியிருப்பு.
- சர்வதேச முதியோர், சிறுவர் தினம்

03 - செபமாலை அன்னை திருவிழா - மடுத்திருப்பதி, சகாயமாதா - பாவற்குளம்

04 - தூய சகாய மாதா திருவிழா - பெரிய நீலாசனை

07 - செபமாலை மாதா - மணல் மோட்டை
- தூய சகாயமாதா திருவிழா - பாரதிபுரம்

10 - மன்னார் மடுமாதா சிறிய குருமட விழா, குழந்தை இயேசுவின் சின்னத்திரேசாள் - முள்ளிக்குளம்

14 - செபமாலை அன்னை திருவிழா - தலைமன்னார் ஸ்ரேசன்

18 - உலக மறைபரப்புத் தினம் (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்)

20 - மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயராக அபிசேகம் செய்யப்பட்ட 23 ஆண்டு நிறைவு (1992)

25 - தூய அடைக்கல அன்னை திருவிழா - தட்டாங்குளம்

28 - புனித யூதாததேயு திருவிழா - இரட்டைக்குளம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.



## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
- மன்னா நிர்வாகம்.


## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்
*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளாடி இராணுவ முகாமில் தேநீர் அருந்தியதால் ஆயர் சுகவீனமடைந்ததாகக் கூறும் செய்தி தவறானது

## மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் தெரிவிப்பு

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்று தேநீர் அருந்திய நிலையிலேயே திடீர் சுகயீனமடைந்ததாக வெளியாகிய செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஏ. விக்ரர் சோசை அடிகளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மன்னார் மறைமாவட்ட ஆயரும் அருட்தந்தை ஒருவரும் கொழும்புக்குச் செல்லும்போது மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதாகவும், இதன்போது அவர்களுக்குத் தேநீர் வழங்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தேநீரை அருந்திய நிலையிலேயே மன்னார் ஆயர் திடீர் சுகயீனமடைந்ததாகவும் மற்றைய அருட்தந்தை உயிரிழந்துள்ளதாகவும் வெளியாகிய அந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது.

மன்னார் ஆயர் மற்றும் அருட்தந்தை ஆகியோர் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் செல்லவில்லை. அவருக்கு ஏற்பட்டது திடீர் சுகவீனம் என்பது வைத்தியர்கள் மூலம் தெரியவந்துள்ளது. அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளது. மன்னார் ஆயர் தேநீர் அருந்திய நிலையில் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டது என்பதனை மன்னார் ஆயர் இல்லம் முற்றாக மறுத்துள்ளது எனவும் அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

## முள்ளிக்குளம் தொடர்பான கலந்துரையாடல்

படையினரால் கையடக்கப்பட்ட நிலங்களைக் கையளிக்கும் திட்டத்திற்கு ஏற்ப, முள்ளிக்குளம் கிராமம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செப்ரம்பர் மாதம் 5ஆம் அன்று முள்ளிக்குளம் பரலோக மாதா ஆலயத்தில் வடமத்திய மாகாண கடற்படை கட்டளையிடும் தளபதி தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார், சிலாபத்துறை உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. சாந்தன் சோசை , முசலி பிரதேச செயலாளர் மற்றும் முள்ளிக்குளம் பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் பாடசாலையையும், தேவாலயத்தையும் மக்களிடம் கையளிப்பதாக கடற்படைத் தளபதியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை மக்கள் நிராகரித்ததோடு தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்த நிலத்தைக் கையளித்தாலன்றி தாங்கள் வேறு எந்தக் கோரிக்கையையும் ஏற்கமாட்டோமென தெளிவுபடத் தெரிவித்துள்ளனர்.

மக்களின் இந்தக் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுசெல்வதாக கடற்படை அதிகாரியும் பிரதேச செயலாளரும் உறுதியளித்தனர்.

## மடுமாதா சிறிய குருமடத்தில் இணைய விரும்புவோர் கவனத்திற்கு!

"யாரை நான் அனுப்புவேன்? என் பணிக்காக யார் போவார்?" "இதோ நான் இருக்கிறேன். அடியேனை அனுப்பும்" {எசாயா 6:8}

**அன்பார்ந்த பிள்ளைகளே,**

மறைசாட்சிகளின் குருதிதோய்ந்த நம் மன்னார் மறைமாவட்டத்தில் நம் ஆண்டவராம் கிறிஸ்துவின் பணியினைத் தொடர்ந்தாற்ற மடுமாதா சிறிய குருமடத்தில் இணைந்து குருவாக உருவாக பக்தியும், ஆர்வமும், அர்ப்பணமும், விருப்பமும் உள்ளவர்களுக்கான ஓர் அரிய அழைப்பு.

இவ்வாறு இருப்பவர்கள் உங்கள் அர்ப்பண நோக்கை உங்கள் பங்குத்தந்தையிடம் சென்று தெரிவித்து மடுமாதா சிறிய குருமடத்திற்கு நுழைவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்று நிரப்பி எம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

◆ குருவாக உருவாகத் தம்மை அர்ப்பணம் செய்ய விரும்புபவர்கள் ஆகக்குறைந்தது 01 வருடத்திற்கு முன்னர் உங்கள் விருப்பத்தை பங்குத்தந்தையிடம் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

◆ பொதுவாக கல்வித்துறையில் எல்லா நிலைகளிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

◆ ஆங்கில, கணித, விஞ்ஞான, தமிழ்ப் பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கில மொழியிலும் அடிப்படை அறிவு கொண்டிருத்தல் வேண்டும்.

◆ பங்குப்பணிகளிலும், பங்குத்தந்தையோடு இணைந்து செயற்படுவதிலும் ஆர்வமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

◆ நல்லொழுக்கம் மற்றும் எடுத்துக்காட்டான வாழ்க்கைமுறையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

◆ குடும்பப் பின்னணி கவனத்தில் கொள்ளப்படும். பெற்றோருடைய முன்மாதிரிகையான வாழ்வு, அவர்களின் ஆர்வம், பக்தி முயற்சி, அர்ப்பண வாழ்வு, தியாக மனப்பாங்கு போன்றவை மிகவும் அவசியம்.

◆ குருமடத்தில் சேர விரும்புவோர், சமூகத்திலும், நண்பர்களிடத்திலும் நற்பெயர் பெற்றவராக இருக்க வேண்டும்.

◆ பொது அறிவிலும், உடல் நலத்திலும், அர்ப்பண ஆர்வத்திலும், சிறந்தவராக விளங்க வேண்டும்.

தகவல் : குருமட அதிபர்,
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

# மன்னார் ஆயரின் உடல் நிலையில் முன்னேற்றம்

## சிங்கப்பூரில் சிகிச்சைபெறும் ஆயரின் உடல்நிலை தொடர்பாக மருத்துவர் கருத்து



பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாக சிங்கப்பூர் மருத்துவமனையில் அவருக்கு தற்போது சிகிச்சை அளிக்கும் ஆலோசனை மருத்துவர் டாக்டர் பென்டன் ஜியாப் கூறுகிறார். சிங்கப்பூரிலிருந்து பிபிசி தமிழோசைக்கு அளித்த பிரத்தியேகப் போட்டியில், டாக்டர் ஜியாப், "ஆயரின் உடல்நிலை இப்போது நன்றாக இருக்கிறது. அவரது வலது கையிலும், வலது காலிலும் இன்னும் கொஞ்சம் தசைப் பிடிப்பு இருக்கிறது. அவருக்கு தரப்படும் பிசியோதெரப்பிக்கு (அதாவது இயன்முறை சிகிச்சைக்கு) அவர் நல்லமுறையில் ஒத்துழைத்து பயிற்சிபெற்று வருகிறார். நடை பழகும் கருவியை வைத்துக்கொண்டு நடக்கிறார். உடையணிவது போன்ற அன்றாட வேலைகளைச் செய்ய அவருக்கு இன்னும் உதவி தேவைப்படுகிறது. அவருக்கு வந்த மாரடைப்பை வைத்துப் பார்க்கும்போது, இது ஒன்றும் அசாதாரணமானதல்ல" என்றார்.

சிகிச்சை இன்னும் ஆறு மாதம் முதல் ஒன்பது மாதங்கள் வரை தொடரக்கூடும் என்று கூறிய டாக்டர் ஜியாப், ஆனால் அவர் இலங்கைக்கு இன்னும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் திரும்பமுடியும் என்று கருதுவதாகக் கூறினார்.

# திருத்தந்தையின் கியூபா நாட்டுக்கான பயணம் பிடல் காஸ்ரோவை சந்தித்தார் பாப்பரசர்



கியூபா சென்றிருந்த பாப்பரசர் பிரான்சிஸ் அந்த நாட்டின் விடுதலை வீரர் பிடல் காஸ்ரோவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

பாப்பரசராகப் பதவியேற்ற பிறகு, எதிரிகளாக இருந்த அமெரிக்காவும் கியூபாவும் உறவுகளை மேம்படுத்திக்கொள்ள வலியுறுத்தி பாப்பரசர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் அமெரிக்கா மற்றும் கியூபாவுக்கு பத்து நாட்கள் பயணம் மேற்கொண்டிந்த பாப்பரசர் பிரான்சிஸ் கியூபா தலைநகர் ஹவானாவில் உரையாற்றினார்.

அப்போது, அமெரிக்கா மற்றும் கியூபா சமாதான நிலைப்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். இதேபோல் ஹவானாவின் புரட்சிச் சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் பங்கேற்ற பாப்பரசர், இரு நாடுகளும் நெருக்கமாகிவரும் இந்த நேரத்தில் மக்களுக்காகச் சேவைகள் செய்ய வேண்டும் என்றும் கியூபா மக்களைக் கேட்டுக் கொண்டார்.

பின்னர் ஜனாதிபதி இல்லத்தில் வசிக்கும் கியூபா விடுதலை வீரர் பிடல் காஸ்ரோவை சந்தித்துக் கைக்குலுக்கினார். பின்னர் இருவரும் தற்போதைய நிலவரங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது பாப்பரசர் பிரான்சிஸ் தான் கொண்டுவந்திருந்த புத்தகத்தை காஸ்ரோவுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

## கறுக்காக்குளத்தில் மேடையேற்றப்பட்ட இம்மனுவேல் நாடகம்

பாலையடிப் புதுக்குளம் புனித மரியாள் ஆலயம், கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலயம், ஆட்காட்டிவெளி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், ஆலங்குளம் குழந்தையேசு ஆலயம் ஆகிய நான்கு ஆலயங்களை (எட்டு கிராமங்களைச்) சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து மக்சி (MAXI) என்ற அமைப்பின் பெயரில் இம்மானுவேல் நாடகத்தை கடந்த செப்ரம்பர் மாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் மேடையேற்றினர்.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார், வட மாகாண பிரதம செயலாளர் அ. பத்திநாதன், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## திருச்சிலுவைக் கன்னியர்களின் புதிய மாகாண முதல்வராக அருட்சகோதரி கிளயா



இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்களின் புதிய மாகாணத் தலைவியாக அருட்சகோதரி கிளயா சுவானி கடந்த செப்ரம்பர் மாதம் 26ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டார். இவரோடு சேர்ந்து புதிய ஆலோசனைக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

இந்த ஆலோசனைக் குழுவில் அருட்சகோதரி லூசியா ஜோசவ், அருட்சகோதரி றொபினா பவுலின், அருட்சகோதரி ஜெயா பயஸ், அருட்சகோதரி ஜொசவ்வா ஜோசவ், அருட்சகோதரி சுகந்தி பேனாட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி புதிய நிர்வாகம் தன் பணிகளை பொறுப்பேற்றுக்கொண்டது. புதிய மாகாண முதல்வருக்கும், ஆலோசகர்களுக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் சார்பில் மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

## குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் அருட்பணியாளர் றெஜி இராஜேஸ்வரன்

யாழ் அடைக்கல நாயகி ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு. எம். றெஜி றாஜேஸ்வரன் அடிகளார் இம்மாதம் (ஒக்ரோபர்) 3ஆம் திகதி தனது குருத்துவத் திருப்பொழிவின் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து இறைவனுக்கு மகிழ்ச்சியோடு நன்றி கூறினார்.

இவர் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்டங்களின் பல்வேறு பங்குகளில் பங்குத்தந்தையாகவும், புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபராகவும், யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளராகவும் பல பணிகளைச் சிறப்புற ஆற்றியுள்ளார்.



பொன்விழா நாயகரான அருட்தந்தைக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

## பிரித்தானிய துணைத் தூதுவர் குருமுதல்வர் சந்திப்பு

கடந்த செப்ரம்பர் 5ஆம் திகதி அன்று இலங்கைக்கான பிரித்தானிய துணைத்தூதுவர் லவ்றா டெவிஸ் அவர்கள் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்களை ஆயர் இல்லத்தில் மரியாதையின் நிமித்தம் சந்தித்து உரையாடினார். ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை, அரசினால் கையாடப்பட்டுள்ள காணி விவகாரம், மனித உரிமைகள் மேம்பாடு, மத நல்லிணக்கம், மன்னார் ஆயரின் உடல்நிலை போன்ற விடயங்கள் இக்கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டதாக மன்னார் ஆயர்இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணியாளர் மா.றேஜிஸ் இராசநாயகத்தின் மூன்று முத்தான நூல்கள்

## 01. அமைதியில் ஆண்டவரோடு

சத்தக் கலாசாரத்தோடு சங்கமமாகிவிட்டது இன்றைய சமுதாயம். எங்கும் சத்தம், எதிலும் சத்தம். சமயமும் ஏன், சமய வழிபாடுகளும்கூட இதற்கு விதிவிலக்கல்ல. அமைதியில் இருக்கவும், அமைதிக்குள் இறங்கவும் பழக்கப்படாததால்தான் ஆன்மீகம் என்னும் ஆழ்கடலுள் மூழ்கி இறையனுபவம் என்னும் முத்தை எடுக்க முடியாதவனாக மனிதன் மூச்சுத் திணறுகின்றான். வெற்று வார்த்தைகளை அடுக்கிக்கொண்டு போகிறான். வெளியே நின்று வேடிக்கை பார்க்கிறான். இந்நிலையில்தான் "அமைதிகொண்டு நானே கடவுளென உணர்ந்துகொள்ளுங்கள்" என்கிறது திருப்பாடல் 46:10.

செபம் என்றால் என்ன? செபிக்கும் முறைகள் எவை? செபத்தில் நிகழ்வது என்ன? என்ற கேள்விகள் முக்கியமானவை. செபவாழ்வின் பிரச்சினை என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். சிறு பருவந்தொட்டு செபிக்கின்றோம். ஆனால் ஏன் வாழ்வில் மாற்றம் ஏற்படுவதில்லை? வாழ்க்கையில் சிறு புயல் வீசியவுடன் "இறைவன் உண்மையில் இருக்கிறாரா? மெய்யாகவே எனது செபத்திற்குச் செவிசாய்ப்பாரா? அல்லது நான் காற்றோடு பேசுகிறேனா?" என்று பேதலிக்கிறோம். உண்மையில் செபத்தின் உச்சக்கட்டம் அமைதி. அமைதியில் ஆண்டவரிடம் சரணடைவது அவரோடு சங்கமமாவது.

ஆண்டவரைத் தேடி, அவரது உறவில் வளரும்போது என்ன நிகழ்கிறது? முதலில் நாம் அவரது அமைதியில் ஆழமாகச் செல்வோம். ஆவியின் கனிகளான சமாதானம், மகிழ்ச்சி, அன்பு எமது நிலையான உள்ளார்ந்த அனுபவமாகிறது. எம்மைப் பெரிதும் பாதித்த தடைக்கற்கள் ஆண்டவரின் மலைமேல் ஏறிச்செல்வதற்கான படிக்கற்களாகின்றன. அடுத்ததாக ஆண்டவரின் வார்த்தையைத் துல்லியமாகக் கேட்கப் பழகுகின்றோம். 'வாழ்விலே, வரலாற்றிலே ஓங்கி ஒலிக்கும் அவரது குரலைக் கேட்க முடியும்' அடையாளங்களை இனங்காண முடியும். எமது உள்ளத்தின் ஆழத்தில் ஊற்றெடுத்துப் பாயும் இறை அன்பு, இரக்கம், மன்னிப்பு என்பவற்றின் ஊற்று ஆவியானவரே என்பதை இனங்காணுகின்றோம்.

இறைவனது அன்பில் திளைக்கும் இந்த அனுபவம் எமது ஆன்மாவின் ஆழத்தில் இறைவன்பால் உள் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது. இவ்வன்பு பாசமாகி, எமது உள்ளத்தின் ஆழத்தையும் மாற்றிக்கொள்கின்றது. இறைவனை அன்புசெய்வதே எம் வாழ்வின் நோக்கமாகின்றது. ஆண்டவரது கரம் எம்மீது இருப்பதாலும், ஆவியால் எம்மை வழிநடத்துவதாலும் மனித நிலையில் பெருமுயற்சி எடுக்க வேண்டியவையும், பெருஞ்சுமையுமாக இருந்தவையுமானவை இப்பொழுது இலகுவானவையாகவும் மகிழ்ச்சியானவையாகவும் மாறுகின்றன.

இவற்றை அடிப்படையான அனுபவமாகக் கொடுப்பதுதான் 64 பக்கங்களைக் கொண்ட இச்சிறிய நூல். இந்நூல் சகோ. லலித் பெரேரா எழுதிய QUIET TIME WITH THE LORD என்னும் நூலின் தமிழாக்கம்.

இந்நூல் 06 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

01. செபம் பற்றிய எமது கண்ணோட்டம் என்ன?
02. ஆண்டவருடன் தனிப்பட்ட சந்திப்பு
03. இறைவனிடமிருந்து விலகுதல் ஆன்மீக இருள்
04. இறைவனோடு சந்திப்பு
05. அமைதியான நோக்கத்தை ஆரம்பிப்பது எப்படி?
06. இறைவார்த்தை மூலம் இறைவனது குரலைக் கேட்பதற்கு சில உதாரணங்கள்.

சாதாரணமாகவும் ஆடலாம்! விதிமுறையாகவும் ஆடலாம்! சாதாரணமாகவும் விளையாடலாம்! விதிமுறையாகவும் விளையாடலாம். அதுபோலவே சாதாரணமாகவும் செபிக்கலாம். விதிமுறையாகவும் செபிக்கலாம்.

நற்கருணை ஆண்டவர் முன்பாக இறைவார்த்தை இழையோட இதயத்தின் ஆழத்தில் இறைவன் பேசுவதை உணரத்தூண்டும் அருமையான நூல் இது. விலை ரூபா 50/=

## 02. இயேசு அன்பின் சமுத்திரம்

சமுத்திரத்திற்கு ஒரு சிறப்பான தன்மை உண்டு. மறைந்திருக்கும் உட்பகுதியையும் அதன் ஆழத்தையும் எவரும் உண்மையில் முதல் பார்வையிலேயே அறிந்துகொள்ள இயலாது. முதன்முதல் அதன் அமைதியான மென்மை, மற்றும் நீலப் - பச்சை வர்ணத்தினால் எல்லோரும் அதன்பால் கவரப்படுகின்றனர். ஆனால், சமுத்திரத்தின் ஆழத்தைப் பார்க்க ஆரம்பித்தால் அவருக்குச் சமுத்திரம் சவாலாகவும், விறுவிறுப்பூட்டுவதாகவும் பயமூட்டுவதாகவும் இருக்கும். இதன்பின் சமுத்திரத்தின் தோற்றம் அவரின் மனதில் பெரிது பெரிதாக வளரும். சவால்களுக்கு முகங்கொடுக்கவும் வேதனைகளை அனுபவிக்கவும் வேண்டி வரலாம். ஆனால் சமுத்திரத்தின் அற்புதத் தன்மையையும் பெறுமதியையும் உணரும்பொழுது அவைகளினால் தூண்டப்படுவதைக் காண்பர்.

"இயேசுதான் அன்பின் சமுத்திரம்". உண்மையாகவே அவர் அமைதியான மென்மையான மனிதப் பிறவிதான். பல காரணங்களால் எல்லோரும் அவர்பால் ஈர்க்கப்படுகின்றனர். சிலருக்கு அவர் கொடை வள்ளல், வேறு சிலருக்கு புதுமைகள் புரிபவர். வேறு சிலருக்கு சுகமளிப்பவர். இன்னும் சிலருக்கு விடுதலை வீரர். இவையெல்லாம் கடற்கரையில் இருந்து கடலைப் பார்க்கின்றவர்களின் காட்சி. தனக்குள்ளே ஊடறுக்கும் இயேசுவின் காட்சியும், அன்பும் வித்தியாசமான ஒன்று. அவரிலும், அவரின் இயல்புக்குள்ளும் தேடுவதனாலும் மற்றும் செபித்து அவருடன் தனிப்பட்ட உறவுமுறை பேணுவதிலும்தான் அது அகப்படுகின்றது. இயேசுவில் அவர் கடவுளையே காண்பார். அவரில் தனது மீட்பைக் காண்பார். எல்லாவித ஆன்மீகச் செல்வங்களையும் அவரிலிருந்து பெறுவார்.

உலகளாவிய ஆன்மீக குணமாக்கும், மற்றும் அவைசார் சேவைகளின் போதகரான மிகவும் வணக்கத்திற்குரிய அருட்பணி யோசப் கே. பில் கேரளா மாநிலத்தின் வின்சன்சியன் சபையைச் சார்ந்தவர். சாலக்குடி ஆன்மீக நிலையத்தின் ஆரம்ப நிறுவுனர்களில் இவரும் ஒருவர். இவரது தொலைநோக்கு சிறு சிறு இறைவார்த்தைப் பகிர்வுகளோடு நற்கருணை ஆண்டவர்முன் அமைதியில் இருப்பது. சில சில காரணங்களால் சில காலத்தின்பின் இவர் அமெரிக்காவிலே தங்கி முழு உலகிற்கும் வானொலி, தொலைக்காட்சி மூலம் ஞானவொடுக்கங்களை நடத்தி இரண்டு வருடங்களுக்குமுன் இறைபதம் அடைந்தார்.

அவரது உரைகளின் தமிழாக்கமே இச்சிறிய கைநூல். இதில் 12 அலகுகள் உள்ளன.

01. இறைவன் அன்பின் வெளிப்பாடு
02. இறையன்பின் இயல்பு
03. மனிதனின் பாவமும் அதன் தாக்கங்களும்
04. இயேசு உலகின் மீட்பர்
05. மன்னித்தலும், தவநிலையும்
06. உள்ளக குணமாக்கல்
07. குணமாக்குபவரான இயேசு
08. தூய ஆவியில் திருமுழுக்கு
09. விசுவாசத்தின் சக்தி
10. புனித நற்கருணை - அன்பின் சமுத்திரம்
11. மரியாள் எமது அன்னை
12. நீர் புனிதராகலாம்

நூலின் விலை ரூபா 150/=

## 03. இதை என் நினைவாகச் செய்யுங்கள்

வாழ்வுக்கு ஓர் அர்த்தம் தேடும்காலம் இளமைப்பருவம். இத்தேடலில் உறவுத்தொடர், ஆன்மீகவாழ்வு, பொருளாதாரம் போன்றவைகளின் அடிப்படையில் எழுகின்ற சிக்கல்கள் பல. இவை தவிர்ந்த சமகால இழப்புக்கள் வேறு. இந்நிலையில், ஒத்துணர யாரும் இல்லாதவிடத்து சோர்வும், விரக்திநிலையும் தோன்றுகின்றன. இவை இளமையின் விபரிக்கமுடியாத மெய்மைகள்.


இம்மெய்மைகள் மத்தியில் "நற்கருணை விருந்து" என்னும் அப்பம் பகிரும் நிகழ்வு நம்பிக்கை தருகின்றது. விவிலியப் பின்னணியில் அப்பம் உயிரூட்டம் தரும் ஊடகமும், பகிர்தலின் அடையாளமுமாக விளங்குகின்றது. அன்று, கொடூர மரணச்சுமை மனத்தை அழுத்தும் உச்சக்கட்டத்திலே தம் சீடர்கள் மத்தியில் சகோதரத்துவத்தை உருவாக்க அன்பினால் தம்மைப் பலியாக்கிய புனித நிகழ்வுதான் நற்கருணை விருந்து. எனவே, பகிர்தல் என்பது அடுத்தவர் நிலையுணர்ந்து தன்னைத் தியாகம் செய்து அவரை வாழவைப்பது. இதுவே இயேசு வாழ்ந்துகாட்டிய பகிர்தல்.

நூல்களின் அட்டைப்படங்களைக் கீழே காணலாம்.










# கண்டுபிடிக்கப்பட்டது சர்ச்சைக்குரிய கிணறு! மன்னார் புதைகுழி வழக்கில் திருப்பம்!

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் மீட்கப்பட்ட மனிதப் புதைகுழி இருந்த இடத்துக்கு அருகே மனிதச் சடலங்களைப்போட்டு மூடப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் கிணறு எதுவும் இருக்கவில்லை என்றும், மயானம்தான் இருந்தது என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கூறிவந்த நிலையில் வழக்கின் பெரும் திருப்பமாக அங்கு சிமேந்தினாலான கட்டு ஒன்றின் மூலமாகக் கிணறு இருந்தமை கடந்த ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு பாதுகாப்பை வலுப்படுத்துமாறு மன்னார் நீதவான் ஏ. ஜி. அலெக்ஸ்ராஜா அந்த இடத்தில் வைத்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அத்துடன் அந்தப் பகுதியூடாக இடம்பெற்றுவரும் போக்குவரத்தையும் தடைசெய்து போக்குவரத்துக்கு மாற்றுப் பாதையை உபயோகிக்கவும், அதுபற்றிய அறிவித்தலைக் காட்சிப்படுத்துமாறும் நீதிவான் 26.08.2015 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ. ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் கடந்த 26.08.2015 அன்று விசாரணைக்கு வந்தது. இதன்போது காணாமல்போன குடும்பங்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் குறித்த மனிதப் புதைகுழி பற்றிய ஆய்வுக்கு தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட வேண்டியதன் அவசியம்பற்றியும் வலியுறுத்தினர். ஏற்கனவே தோண்டப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியுள்ளது. அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் கோரினர். கடந்த 06.08.2015அன்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனிதப் புதைகுழி உள்ள இடத்தில் கிணறு இருந்தது என்றும், அதுபற்றிய குறிப்புநில அளவைப் படத்தில் உள்ளது என்றும், வரைபடம் ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. அதன்படி குறித்த கிணற்றை அடையாளப்படுத்துமாறும் அதனைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

அதன்படி அதனை நிறைவேற்றும் பொருட்டு நீதிவான், சட்டத்தரணிகள், நில அளவைத் திணைக்களத்தினர். மன்னார் பொலிஸ் அதிகாரிகள், குற்றப்புலனாய்வுப் பிரிவு விசேட விசாரணைப் பிரிவினர் உள்ளிட்ட அதிகாரிகள் 26.08.2015 அன்று சம்பவ இடத்துக்குச் சென்று ஆராய்ந்தனர். அதன்போது 23 இற்கும் மேற்பட்ட சிவில் உடை தரித்த புலனாய்வாளர்களும் குவிந்திருந்தனர்.

சட்டத்தரணிகளால் ஏற்கனவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1971ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கிணற்றை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்பட்டது. அதன்படி மன்னார் சங்குப்பிட்டி வீதியிலிருந்து உட்புறமாக 75 மீற்றர் தூரத்தில் பற்றைக்காடாகவுள்ள இடத்தில் - 22 கிலோ மீற்றர் அகலமுடைய இடத்தில் மாந்தை தேவாலயத்திற்கு முன்பாகக் குறித்த கிணற்றை இலகுவாக அடையாளம்காண முடிந்தது. பற்றைகள் கொண்ட அந்த இடத்தில் வரைபட உதவியின் மூலமாகக் குறித்த இடத்தில் சோதனை மேற்கொண்டபோது சீமேந்தினாலான கட்டு ஒன்றை இலகுவாகக் கண்டறிய முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அங்கு மனிதப் புதைகுழி இல்லை என்றும், அந்த இடத்தில் முன்னர் மயானம் காணப்பட்டது. என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றில் கூறப்பட்டுவந்த நிலையில், அந்தத் தகவல் பொய் என்பது கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதன் மூலம் தெரியவருவதாகக் கூறப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவ்வாறு கூறிவந்தபோதும் அதனைச் சட்டத்தரணிகள் மறுத்துரைத்துவந்த நிலையில் கிணறு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையானது இந்த வழக்கில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்தே அந்த இடத்தில் பாதுகாப்பு மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது. குறித்த இடத்தினூடாகத் திருக்கேதீஸ்வரம் செல்லும் போக்குவரத்திற்கான பாதையை விடுத்து மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு பணித்த நீதிவான், அந்தப் பாதை மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழிலும், சிங்களத்திலும் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துமாறும் கூறியுள்ளார். அந்தப் பகுதி பற்றைகள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. அவற்றை இயந்திரவலு மூலமாகத் துப்பரவு செய்தால் தடயங்கள் அழிவடைய அல்லது மாறுவதற்கு வாய்ப்புள்ளமையால் மனித வலு மூலமாகப் பற்றைகளை வெட்டித் துப்பரவு செய்யுமாறும் பணித்துள்ளார். அது மட்டுமன்றி அந்த இடத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், அந்த இடத்தில் பொதுமக்கள் மற்றும் விலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துமாறும் பணித்துள்ளார்.

# 9 மாதங்களில் 795 பாலியல் வல்லுறவுகள்! 10 சிறார்கள் கொலை!

நாட்டில் கடந்த 9 மாதங்களில் 10 சிறார்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் சிறார்கள் மற்றும் பெண்கள் என 795 பேர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பதில் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த 9 மாதங்களில் சிறுவர்கள் கடுமையாக நடத்தப்பட்டுள்ளமை குறித்து 84 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தலவத்துகொடை, மாதிவலதேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜயகொடி இதனைத் தெரிவித்துள்ளார். 2014ஆம் ஆண்டில் 27 சிறார்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். சிறுவர்கள் கொடுமையாக நடத்தப்பட்டமை தொடர்பில் 197 சம்பவங்கள் நடந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

## மடுறோட் ஆலயத் திருவிழா



மடுத்திருப்பதியிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மடுறோட் கிராமத்தின் பாதுகாவலியான தூய மரியன்னையின் வருடாந்த ஆலயத்திருவிழா கடந்த செப்ரம்பர் மாதம் 24ஆம் திகதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

22ஆம் மாலை 5.00 மணியளவில் மடுத்தியான இல்லத்தின் அருட்தந்தை பி. யேசுராஜா அடிகளாரினால் கொடியேற்றம் செய்யப்பட்டு நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து 23ஆம் திகதி நற்கருணை நாதருக்குரிய நாளாகத் தீர்மானிக்கப்பட்டு வேஸ்பர் ஆராதனையினை மடுத்திருத்தலத்தின் உதவி அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் நடாத்தினார். தொடர்ந்து 24ஆம் திகதி இடம்பெற்ற திருவிழாத்திருப்பலி கூட்டுத்திருப்பலியாக அருட்பணி. பி. யேசுராஜா, அருட்பணி. சேவியர் குரூஸ், அருட்பணி. இராயப்பு ஆகியோரால் தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டு திருவிழா இனிதே நிறைவெய்தியது.

இவ்வாலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி. சவுல்நாதன் அடிகளார் நாட்டில் இல்லாத காரணத்தினால் இத்திருவிழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் மடுத் தியான இல்லத்தின் அருட்தந்தை இராயப்பு அடிகளார் பொறுப்பேற்று செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

*தகவல்: சி. சுஜீவன், மடுறோட்*

## சிவில் பாதுகாப்புக் குறித்து மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 42 கிராம அலுவலர்கள் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபில்யு. எம். எம். விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச்செயல்கள், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதோடு இவற்றைத் தடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் குறித்து வருகைதந்தவர்களால் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. எம். எம். விக்கிரமசிங்காவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இரவு நேரங்களில் குறிப்பிட்ட இடங்களுக்கு பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும், இவை தொடர்பில் கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் விழிப்புடன் செயற்படுமாறும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்தார்.


## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும்
உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள்
மன்னாவைப் பெற ஏன் நீங்கள்
வழிசெய்யக்கூடாது?

**ஒரு வருடத்திற்கான**
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276


## மாற்றங்களை உருவாக்கும் சக்தி பெற்றவர் திருத்தந்தை

சமுதாயப் பிரச்சினைகளையும், அதனால் உருவாகும் காலநிலை மாற்றங்களையும் சீரமைக்க மனித இயக்கங்கள் தேவை என்றும், அத்தகைய இயக்கங்களை வழிநடத்தக்கூடியவர் திருத்தந்தை பிரான்சிஸ் என்றும் இந்தியாவின் மாநகர மேயர் ஒருவர் கூறினார்.

கத்தோலிக்க திரு அவை, இவ்வுலகெங்கும் பரவியுள்ள ஓர் இயக்கம் என்ற கண்ணோட்டத்தில் சிந்திக்கும்போது, அதன் தலைவராக விளங்கும் திருத்தந்தை உலகெங்கும் மாற்றங்களை உருவாக்கும் சக்தி பெற்றவர் என்று சுட்டிக்காட்டிய மேயர் சம்மனி அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும் கருத்துக்கள், கத்தோலிக்கர்களால் மட்டுமல்லாமல், உலகின் பல்வேறு மக்களாலும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது என்று எடுத்துரைத்தார்.

# மடுத்திருத்தல தூய ஜோண் மரிய வியான்னி தியான இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள்

### சித்திரை - ஆவணி 2015

**1. சித்திரை 14 – 17 : கார்மேல் சபை அருட்சகோதரிகளுக்கான கருத்தமர்வு**

35 உறுப்பினர்கள் பங்கெடுத்த கார்மேல் சபை அருட்சகோதரிகளுக்கான கருத்தமர்வு மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் மடுத்தியான இல்லத்தில் இடம்பெற்றது. அருட்சகோதரி திரேஸ்ராணி அவர்களின் வழிநடத்துதலில் இடம்பெற்ற இந்நிகழ்வின் வளவாளர்களாக அதே சபையைச் சேர்ந்த இரு அருட்சகோதரிகள் செயற்பட்டனர். அருட்சகோதரிகளின் அழைப்பு, வாழ்க்கை மற்றும் பணிகள் - குறிப்பாக கல்விப்பணிகள் பற்றியதாக இக்கருத்தமர்வு அமைந்திருந்தது. இந்நிகழ்வில் பங்கெடுத்தோர் அனைவரும் இலங்கை நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் கல்விப்பணி புரிகின்ற இளைய அருட்சகோதரிகள் ஆவர்.

**2. வைகாசி 01 – 03 : திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு**

56 அங்கத்தினர் பங்குபற்றிய இக்கருத்தமர்வானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் மடுத்தியான இல்லத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான இக்கருத்தமர்வின் நோக்கமானது திருப்பாலத்துவசபைச் சிறார்களை இறைவழியில் வழிநடத்தி, அவர்களுக்கு நல்ல உருவாக்கம் கொடுத்து, அவர்களை உயர்ந்தவர்களாக ஆக்குவதற்காக ஊக்குவிப்பாளர்களைத் தயார் செய்வதாகும். இந்நிகழ்வினை மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவசபை ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை அ. யூட் குரூஸ் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார்.

**3. வைகாசி 19 : மடுப்பிரதேச செயலகம் நடாத்திய பயிற்சிப் பாசறை**

108 உறுப்பினர்கள் பங்குபற்றிய இப்பயிற்சிப் பாசறையானது மடுப்பிரதேச செயலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டது. மடுப் பிரதேசச் செயலகப் பிரிவின் பல கிராமங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்ற தையற் பயிற்சியினை நடாத்துகின்ற உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்தனர். மடுத்தியான இல்லத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சிறப்பான முறையில் இப்பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது. இப்பயிற்சியானது பயிற்றுனர்கள் பயிலுனர்கட்கு தையற்கலையை மட்டும் கற்பிப்பதோடு நிறுத்திவிடாது தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் போன்ற உயர்ந்த பண்புகளையும் கற்றுக்கொடுத்து, பயிலுனர்களை முழு மனிதர்களாக உருவாக்க வேண்டுமென்ற வகையில் நடாத்தப்பட்டது.

**4. வைகாசி 28 – 31 : உயிர்த்த ஆண்டவர் சமூகம்**

இலங்கைத் தீவின் பல பிரதேசங்களிலும் நற்செய்தி அறிவிப்புப் பணியினைச் செய்துகொண்டிருக்கின்ற குழுக்களில் ஒன்றான சகோதரர் லலித் பெரேரா தலைமையிலான 'உயிர்த்த ஆண்டவர் சமூகம்' என்ற பெயரில் இயங்கிவரும் குழுவினால் மடுத்திருத்தலத்தில் திருவிழிப்பு நிகழ்வானது வைகாசி மாதம் 30ந் திகதி முழு இரவு நிகழ்வாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்வதற்கென 115 உறுப்பினர்கள்கொண்ட குழுவொன்று வைகாசி மாதம் 28ந் திகதி முதல் 31ந் திகதி வரை மடுத்தியான இல்லத்தில் தங்கி இருந்தனர். வைகாசி மாதம் 30ந் திகதி மாலை 7.00 மணியளவில் ஆரம்பமாகிய திருவிழிப்பு நிகழ்வானது மறுதினம் காலை 8.00 மணியளவில் ஞாயிறு திருப்பலியோடு நிறைவுபெற்றது.

மடுத்திருத்தலப் போட்டிக்கோ முன்றலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ் மற்றும் சிங்களக் கத்தோலிக்கர் முப்பதாயிரம் (30,000) பேர் வரையில் பங்கெடுத்தனர். இந்நிகழ்வில் 05 ஆயர்களும், 40க்கு அதிகமான குருக்களும், 30க்கு மேற்பட்ட கன்னியர்களும் பங்கெடுத்தனர். "தந்தையே! எம்மை ஒன்றுபடுத்தும்" என்ற தொனிப்பொருளில் திருவிழிப்பின் அனைத்து உரைகளும் வழிபாடுகளும் இடம்பெற்றன.

**5. ஆனி 18 – 20 : வாசனைத் திரவிய தொழிலகப் பணியாளர்க்கான சுற்றுலா நிகழ்வு**

நீர்கொழும்புப் பிரதேசத்தில் வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்துகொண்டிருக்கும் பணியாளர்களுக்கான சுற்றுலாவானது மடுத்தியான இல்லத்தை இரவுத்தரிப்பிடமாகக்கொண்டு இடம்பெற்றது. இரத்தினபுரி மறைமாவட்டத்தின் குருமுதல்வர் அருட்திரு. டேமியன் பெர்னாண்டோ அடிகளாரின் வழிகாட்டலில் இயங்கிவரும் இத்தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களில் 42 பணியாளர்கள் இதில் பங்கெடுத்தனர். இவர்கள் ஆனி மாதம் 18ந் திகதி நீர்கொழும்பிலிருந்து புறப்பட்டு, மாலை 7.00 மணியளவில் மடுத்தியான இல்லத்தை வந்தடைந்தனர். அன்றைய இரவு உணவினை அடுத்து அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தமது பயண நிகழ்ச்சிநிரல்பற்றிக் கலந்துரையாடினர். மறுதினம் 19ந் திகதி காலை உணவினைத் தொடர்ந்து யாழ்நகர் நோக்கிய பயணத்தினை ஆரம்பித்தனர். அன்றைய தினம் யாழ் நகரில் பல முக்கிய இடங்களையும் பார்வையிட்ட பிற்பாடு இரவு 8.00 மணியளவில் மடுத்தியான இல்லத்தை மீண்டும் வந்தடைந்தனர்.

20ந் திகதி காலை திருப்பலியை முடித்துக்கொண்டு காலை உணவை உண்டதன் பிற்பாடு தமது மூன்று நாட் சுற்றுலா



பற்றிய மீளாய்வில் ஈடுபட்டனர். மடு அன்னையைத் தரிசித்ததும் யாழ் நகரைப் பார்வை இட்டதும் மறக்க முடியாத நிகழ்வுகள் எனப் பேசிக்கொண்டனர்.

**6. ஆடிமாதம் 05 – 10 : தனித்தியானம்**

சல்வரோறியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை யூரி தீபன் லெம்பேட் அடிகளார் தனது வருடாந்தத் தியானத்தினை அருட்திரு. அ. இராயப்பு அவர்களின் வழிநடத்துதலில் மடுத்தியான இல்லத்தில் தங்கியிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் மேற்கொண்டார். தனிமையில் மடு அன்னையின் அரவணைப்பில் தியான இல்லத்தின் அமைதிச்சூழலில் இயேசுவோடு தங்கி இருந்து தியானிக்க முன்வந்தமை பெருமைக்குரிய விடயமாகும். அருட்தந்தையின் வாழ்வும் பணியும் சிறக்க வாழ்த்துவோம்.

**7. ஆடி 20 – 23 : திருவுளப்பணியாளர் சபையினருக்கான வருடாந்தத் தியானம்**

மேற்படி தியானமானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் திருவுளப்பணியாளர் சபைக் குருக்கள், பணியாளருக்கா இடம்பெற்றது. பத்து உறுப்பினர்கள் பங்குகொண்ட இத்தியானத்தினை அருட்தந்தை அ. இராயப்பு அடிகளார் நெறிப்படுத்தினார். அருட்பணியாளர்களோடு பொதுநிலைப் பணியாளர்களும் இணைந்து இத்தியானத்தில் பங்கெடுத்தமை விஷேட அம்சமாகும். இத்தியானத்தினை திருவுளப் பணியாளர் சபையின் இலங்கைக்கான பொறுப்பாளர் அருட்தந்தை அலன் யுஸ்ரஸ் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

**8. ஆடி 23 – 25 : வன்முறையற்ற தொடர்பாடல் கருத்தமர்வு**

52 உறுப்பினர்கள் பங்குகொண்ட இக்கருத்தமர்வானது தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் மன்னார்க் கிளையின் வழிநடத்துதலில் நடாத்தப்பட்டது. இளைஞர், யுவதிகளுக்கான இக்கருத்தமர்வானது தற்போதய நாட்டுச்சூழலில் எப்பேர்ப்பட்ட வகையில் இன்றய சமூகம், குறிப்பாக இளைய சமூகம் வாழவேண்டுமென்ற வகையில் நடாத்தப்பட்டது. வன்முறையற்ற தொடர்பாடல் ஊடாகப் புரிந்துணர்வு கொண்ட நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நேர்மறைச் சிந்தனையோடு இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் முனாவர் அவர்கள் பங்கெடுத்து தமது கடந்தகால அனுபவங்களையும் எதிர்காலத்திற்கான நல்ல ஆலோசனைகளையும் பகிர்ந்துகொண்டார்.

**9. ஆவணி 01 – 03 : உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை**

64 உயர்தர வகுப்பு மாணவர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு மடுத்தியான இலத்திற்கு அழைத்துவரப்பட்டு தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது. தமிழ், சிங்கள இனங்களைச் சேர்ந்த இவ்விளைஞர்களும், யுவதிகளும் தங்களிடையே உள்ள வேற்றுமை உணர்வுகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு உள்ளத்தூய்மையோடு இம்மூன்று நாள் நிகழ்வுகளிலும் ஆர்வத்தோடு பங்கெடுத்தமை பாராட்டுக்குரியதாகும். இன்றைய இளைஞன் நாளையத் தலைவன் என்ற கோட்பாட்டிற்கமைவாக இம்மூன்று நாட் கருத்தமர்வும் இடம்பெற்றது.

**10. ஆவணி 21 – 28 : பிரான்சீஸ்கன் சபை சகோதரிகளுக்கான வருடாந்தத் தியானம்**

பிரான்சீஸ்க்கன் சபையைச் சேர்ந்த 36 அருட்சகோதரிகள் பங்கெடுத்த இத்தியானமானது முழுமையான எட்டு நாட்கள் கொண்ட தியானமாக இடம்பெற்றது. இலங்கையின் எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் சிங்கள, தமிழ் இனங்களைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பங்கெடுத்த இத்தியானமானது ஆங்கில மொழிகளிலேயே நடாத்தப்பட்டது. இடையிடையே தமிழ், சிங்கள மொழிகளிலும் பாடல்கள் இசைக்கப்பட்டன. அதேசபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளே மறை உரைஞர்களாகவும் செயற்பட்டனர்.

அருட்தந்தை அ. இராயப்பு அடிகளார் தினமும் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 1 - திருவழிபாட்டின் பொருளும், முக்கியத்துவமும்

### 1. "திருவழிபாடு" என்னும் சொல்லின் பொருள் என்ன?

முதன்மையாக, 'லித்தூர்ஜியா' (லத்தீன்)/'லெய்த்தூர்கியா' (கிரேக்கம்) என்னும் சொல்லிற்கு 'பொதுப் பணி' அல்லது 'மக்கள் பணி' என்பது பொருள். இது இரு கிரேக்கச் சொற்களிலிருந்து (அதாவது, 'லாவோஸ்' = மக்கள்; 'எர்கோன்' = பணி) பிறந்தது. நாளடைவில், கடவுளுக்குச் செலுத்தும் பொதுவான வழிபாட்டைக் குறிப்பதற்கு திருச்சபை இச்சொல்லைப் பயன்படுத்தியது.

### 2. "திருவழிபாடு" என்றால் என்ன?

புகழ்ச்சி நிறைந்த வழிபாட்டைத் திருச்சபை (இறைமக்கள் திருக்கூட்டம்) கிறிஸ்து வழியாகக் கடவுளுக்குச் செலுத்துகிறது. இந்த வழிபாடு சில சடங்குகள், சடங்குமுறைகள், அடையாளங்கள், இறைவேண்டல்கள், பாடல்கள், வாசகங்கள் ஆகியவை அடங்கிய தொகுப்பினால் நடைபெறுகிறது. இதுதான் திருவழிபாடு.

### 3. "திருவழிபாடு" நமக்கு எதைப்பற்றி எடுத்துரைக்கின்றது?

கடவுளுக்கு வழிபாடு செலுத்துவதிலும், அருளடையாளங்களைக் கொண்டாடுவதிலும், திருப்புகழ்மாலை வழியாக வேண்டுதல் புரிவதிலும் அருள்வேண்டல் குறிகளைப் (அருள்கருவிகளை)ப் பயன்படுத்துவதிலும் திருச்சபை ;

அ. கடவுளின் மீட்டுத் திட்டம் பற்றியும்

ஆ. கோவில், திருக்கலங்கள், திருத்துகில்கள், திருஉடைகள், திருநூல்கள், மொழிகள் ஆகியன பற்றியும்

இ) சொல்லும் மன்றாட்டுகள் பற்றியும்

ஈ) நிறைவேற்றப்படுகின்ற சடங்குகளைப் பற்றியும்

உ) நிறைவேற்றுகின்ற இறைப்பணியாளர்களைப் பற்றியும்

ஊ) பங்கேற்கின்ற இறைமக்களைப் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கின்றது.

### 4. திருவழிபாட்டினால் விளையும் நன்மைகள் யாவை?

அ) நாம் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய வழிபாட்டைச் சிறப்பித்து, அதை அவருடைய இறைமாட்சிக்கு ஏற்றதாக மாற்றுகிறது: வழிபாடு செய்யும் அனைவரையும் புனிதப்படுத்துகிறது;

ஆ) நாம் நம்புகின்ற இறைத் திட்டங்களையும், மறை உண்மைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது: அவற்றை வெளிப்படையாக எடுத்துச் சொல்வதற்குத் தேவையான வழிகளை நமக்குக் கற்பிக்கிறது.

இ) நாம் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய வழிபாடு, வணக்கம் ஆகிய கடமைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது: அதைத் தகுந்தவிதத்தில் செலுத்துவதற்கு ஏற்ற நேரமும் வாய்ப்பும் அளிக்கிறது.

ஈ) இறையருளை மிகுதியாகப் பெறவும், நம்பிக்கையிலும் அன்பிலும் வளர்ச்சி பெறவும் உதவுகிறது.

உ) கிறிஸ்தவ வாழ்வுக்குத் தேவையான, உரிய மறைக்கல்வியை வழங்குகிறது.

ஊ) அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான மனநிலையை நம் உள்ளத்தில் பிறப்பிக்கிறது. அவற்றின் பலன்களை அபரிமிதமாகப் பெற்றுக்கொள்ளவும் உதவி செய்கிறது.

எ) புனிதமிக்க கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்கவும் இறையாட்சி சமுதாயத்தை உருவாக்கி வளர்க்கவும் நம்மை ஊக்குவிக்கிறது.

### 5. திருவழிபாட்டில் திருக்கூட்டத்தின் பங்கு என்ன?

திருவழிபாட்டில் திருக்கூட்டத்தின் பங்கு/ பங்கேற்பு என்பது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினுடைய ஒரு மறுமலர்ச்சித் திட்டம் ஆகும். அதாவது நம்பிக்கையாளரை முழுமையாகத் திருவழிபாட்டில் பங்கேற்கச் செய்வதே அச்சங்கத்தின் முக்கிய ஒரு நோக்கம். இதை உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் போதனை கீழ்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

"நம்பிக்கையாளர் (விசுவாசிகள்) திருப்பலிக்கொண்டாட்டத்தில் தூய மக்களினத்தினர், கடவுளின் உரிமைச்சொத்து, அரச குருக்களின் கூட்டத்தினர் ஆகின்றனர். இவ்வாறு இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர். மாசற்ற பலிப்பொருளை அருள்பணியாளர் கைகள் வழியாக மட்டுமன்றி அருள்பணியாளரோடு சேர்ந்தும் ஒப்புக்கொடுக்கின்றனர். தங்களையே கையளிக்கவும் கற்றுக்கொள்கின்றனர்" (எண் 95).

இதைப் படிக்கின்றபொழுது திருவழிபாட்டில் காணப்படும் அடையாளங்களில் நம்பிக்கையாளரின் திருக்கூட்டமே மிக முக்கியமான அடையாளம் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே திருக்கூட்டத்தின் பங்கு என்பது திருவழிபாட்டில் ஒவ்வொரு சடங்கிலும் அக்கூட்டத்தின் உறுப்பினர்களாகிய நாம் பங்கேற்பது மட்டுமல்லாமல், திருவழிபாடு நம் உள்ளங்களில் ஊடுருவி, அது நம் மனத்தை மாற்றும் விதத்தில் கொண்டாடப்பட வேண்டும். திருவழிபாட்டுக் கொண்டாட்டம் நம் கோவிலின் சுவர்களைத் தாண்டி, புதிய உலகை உருவாக்க நமக்கு இறையாற்றலைத் தருவதாக அமைய வேண்டும். இதுதான் அரச குருக்களின் கூட்டத்தினராகிய நமது பங்கு.




### 6. திருவழிபாட்டில் சடங்குகளின் முக்கிய பங்கு என்ன?

திருவழிபாடு, திருச்சடங்குகளால் ஆனது; திருச்சடங்குகளில் பல்வேறு அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சடங்குகளும், அடையாளங்களும் தனி மனித ஆன்மீக வளர்ச்சிக்காகவும் திருக்குழுமத்தின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் தங்களது பங்காற்றுவதில் சிறப்பிடம் பெறுகின்றன. இவை இறை அனுபவத்தைப்பெறவும், வெளிப்படுத்தவும் அது பகிர்ந்து கொள்ளப்படவும் காரணிகளாக விளங்குகின்றன.

### 7. திருவழிபாட்டில் அடையாளங்களின் பங்கு என்ன?

அடையாளங்கள் பொருள்களாகவோ, செயல்களாகவோ வார்த்தைகளாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக, தண்ணீர், தலைமேல் கைகளை வைத்தல், புனிதப்படுத்தும் வார்த்தைகள் முதலியன. இவை எளிதில் அறிய முடியாத, மறைபொருளான உண்மையை அறிந்துகொள்ள, உணர்ந்துகொள்ள, புரிந்துகொள்ள உதவுகின்றன. இவையே நமக்கும் மறைபொருளானவற்றிற்கும் இடையே நின்று செயல்படுகின்றன. கடவுளைப்பற்றி இன்னும் ஆழமாக அறிந்து, அவரை வழிபடவும், அன்பு செய்யவும், அவருக்குச் செவிமடுக்கவும் வழிசெய்கின்றன. கடவுள்மேல் உள்ள நமது நம்பிக்கை வளரக் காரணமாயும் அமைகின்றன.

### 8. திருவழிபாட்டு இறையியல் என்பது என்ன?

இறையியல் என்பது இறை அனுபவத்தால் விளைந்த சிந்தனை ஆகும். திருவழிபாட்டு இறையியல் என்பது திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் நாம் பெற்ற இறை அனுபவத்தின் வழியாக எழுந்த எண்ண அலைகள் ஆகும். திருவழிபாட்டில் நாம் கடவுளையும் அவருடைய உடனிருப்பையும் முழுமையாகவும், உண்மையாகவும் அறிந்து, அனுபவித்து, வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறோம். அதை வாழ்வாக்க, திருவழிபாட்டு இறையியல் இறைவேண்டல் (lex orandi) செய்ய மட்டுமல்ல, மாறாக நாம் இறைவனை நம்பவும் (lex credendi) நம்புவதை வாழவும் நம்மை அழைக்கிறது.

### 9. திருவழிபாட்டு மறைக்கல்வி என்பது என்ன?

திருவழிபாடு பற்றிய கற்பித்தலும், கற்றறிதலும் திருவழிபாட்டு மறைக்கல்வி ஆகும். ஒவ்வொரு மறைக்கல்வியும் அடிப்படையில் திருவழிபாட்டிலிருந்தே ஆரம்பமாகிறது. திருவழிபாட்டை நோக்கியே இருக்கிறது. இத்தகைய மறைக்கல்வி கிறிஸ்தவ நம்பிக்கையை அடிப்படையாகவும் முதன்மையான இலக்காகவும் கொண்டிருக்கிறது. திருவழிபாட்டு மறைக்கல்வி திருவழிபாடு தொடர்புடைய அனைத்தையும் சுற்றியே அமையும்.

### 10. திருவழிபாட்டு இயக்கம் என்பது என்ன?

திருவழிபாட்டில் 'புதுப்பித்தல்' அவசியம் என்ற எண்ணம் திருவழிபாட்டு இயக்கம் உருவாகக் காரணமாக இருந்தது. இந்த இயக்கம் 1800ல் உருவாகியது. பிரான்சு நாட்டைச் சேர்ந்த Prosper Guaranger என்பவர் **'திருவழிபாட்டு இயக்கத்தின் தந்தை'** எனப்படுகிறார்/ இவரைப் போன்ற ஐரோப்பிய நாடுகளில் பல திருவழிபாட்டு வல்லுனர்களின் தனிப்பட்ட ஆர்வம் திருவழிபாட்டிற்கு சிறப்பான ஒரு வித்தாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. உதாரணமாக.

- திருத்தந்தை 10ஆம் பயஸ்: 'திரு இசை' பற்றிய ஒரு கொள்கைத் திரட்டை (Tra le Sollecitudini) வெளியிட்டார் (1910): மக்களின் செயலாக்கம் நிறைந்த பங்கேற்புதான் உண்மையான கிறிஸ்தவ மனநிலை உருவாகக் காரணமாக அமையும் என்றார்.
- Dom Lambert Beauduin 'திருச்சபையின் பக்தி' (La Piete de l Eglise) என்ற ஒரு நூலை வெளியிட்டார். (1914): கிறிஸ்துவின் மறை உடலின் உண்மைப் பொருள் பற்றியும் திருவழிபாட்டின் வழியாக நாம் அந்த உடலின் உரு பகுதி என்பதையும் தெளிவுபடுத்தினார்.
- திருத்தந்தை 12ஆம் பயஸ்: 'கடவுளின் இணைப்பாளர்' ('Mediator Dei-1947) என்ற அவரது திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டும், 'திருவழிபாட்டில் மக்களின் பங்கேற்பு' பற்றிய அவரது படிப்பினையும் மக்களின் தாய்மொழியில் வழிபாடு நடத்த வித்திட்டன. பாஸ்கா திருவிழிப்பு சீரமைப்பு (1951), புனித வாரம் சீரமைப்பு (1955) போன்றவை அவரது திருவழிபாட்டுச் சீர்திருத்தத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள்.
- திருத்தந்தையர் 23 ஆம் யோவான், 6ஆம் பவுல்: இரண்டாம் வத்திக்கான் சங்கம், 'திருவழிபாடு' (1963) (Sacrosanctum, Concilium) என்ற கொள்கைத் திரட்டு வழியாக மக்களின் தாய்மொழி, மக்களின் பண்பாடு, மக்களின் முழுமையான, உணர்வுபூர்வமான செயல்முறைப் பங்கேற்பு போன்றவற்றை இத்திருத்தந்தையர் உறுதிப்படுத்தினர்.
- திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல்: திருச்சங்கம் கொண்டு வந்த சீர்திருத்தத்தை 1980இல் இவர் மீண்டும் வலியுறுத்தினார்.
- திருவழிபாட்டு இயக்கத்தின் மிகச்சிறப்பான இலக்குகள் இரண்டு உள்ளன:

அ) மக்களின் செயல்முறைப் பங்கேற்பு:

ஆ) திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்குதலை ஊக்குவித்தல்.

இவ்வாறு திருவழிபாட்டு இயக்கம் திருவழிபாட்டு வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

### 11. அருள்பணி திருவழிபாடு (Pastoral Liturgy) என்பது என்ன?

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இதயமே இறைமக்களின் அருள்பணி நலன்தான். இதனைக் கருத்தில்கொண்டுதான் திருவழிபாடும் அமைய வேண்டும் என்பது இச்சங்கத்தின் பேராவல். எனவே திருவழிபாட்டில் இறைமக்களின் முழுமையான, பொருளுள்ள, செயல்முறையிலான (திவ 14) பங்கேற்பை உற்சாகப்படுத்துகின்ற விதத்தில் ஆயர்களும் அவர்களின் உடனுழைப்பாளர்களும் பெரிதும் கவனத்தில்கொண்டு பணிபுரிய வேண்டும் (Inter Oecumenici, First Instruction cred Liturgy) என்று திருச்சபை மேலும் வலியுறுத்துகிறது.

எனவே அருள்பணி திருவழிபாடு கீழ்வரும் சில கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது:

- திருவழிபாட்டு விளக்கம், மறையுரை, மறைக்கல்வி, இசைப் பயிற்சி.
- இந்த அம்சங்கள்தான் மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்கும்:
- இவற்றின் விளைவு: இவை அருள்பணி நலனை மையப்படுத்தியத் திருவழிபாட்டை மக்களுக்குச் சிறப்பாக எடுத்துச் சொல்லும்.

### 12. நாம் மூவொரு கடவுளின் பெயரைச் சொல்லி எந்தவொரு திருவழிபாட்டு நிகழ்வையும் சடங்கையும் ஆரம்பிப்பது ஏன்?

ஒரே கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கிறார் என்பது கிறிஸ்தவ மறை உண்மை. இதைக் கிறிஸ்துவே வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது மட்டும் அல்ல, மேலும் ஒரு மறைநிகழ்வைத் தொடங்கும்முன் இந்த மூவொரு கடவுள் பெயரை அவரே தந்து, அதை நாம் சொல்ல அடித்தளமிட்டிருக்கிறார் என்பதும் இன்னும் மறுக்க முடியாத சிறப்பு அம்சமாகும். (காண்க மத் 28:19)

கடவுளைப் பெயரிட்டு அழைப்பது விவிலிய மரபு. அதாவது, தந்தை கடவுளை 'ஆண்டவர்' (திபா 8:1) என்றும், மகன் கடவுளை 'இணைப்பாளர்' (1 திமொ 2:5) என்றும் தூய ஆவியார் கடவுளை 'துணையாளர்' (யோவா 14:26) என்றும் விவிலியம் எடுத்தியம்புகிறது. அதைப் பின்பற்றி நாமும் கடவுளை "தந்தை, மகன், தூய ஆவியார்" எனப் பெயரிட்டு அழைப்பது நமது திருவழிபாட்டின் மொழியும் பாடமுமாக இருக்கிறது. இந்த மொழியும் பாடமும் தருகின்ற அம்சங்கள்.

**அ) மூவொரு கடவுளைச் சார்ந்தது:**

- மூன்று ஆள்களிடையே உள்ள ஒற்றுமை இந்த இணைப்புச் சொற்களில் வெளிப்படுகிறது.
- மூவொரு கடவுளின் மீட்புத் திட்டம் வெளிப்படுகிறது.
- திருக்கூட்டத்தை ஒன்றுபடுத்தும் மூவொரு கடவுளின் ஆற்றலும் வல்லமையும் வெளிப்படுகிறது: இயேசு கற்றுத்தந்த இந்தப் பாடம் வழிபாடு முழுவதற்கும் துணையாக இருக்கிறது.

**ஆ) ஆர்ப்பரிப்பும் அழைப்பும்:**

இது ஓர் ஆர்ப்பரிப்பையும் புகழ்ச்சியையும் வெளிப்படுத்தும் பாடம் மட்டுமல்ல: இது கடவுளிடம் செல்லவும் அவர் அனுபவத்திற்குள் நுழையவும் அவரில் நிலைத்திருக்கவும் இறைமக்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் ஓர் அழைப்பு.

**இ) நம்மைச் சார்ந்தது:**

- கடவுளைப் பெயர் சொல்லி அழைக்கிறோம்:
- கடவுளை வழிபடுகிறோம்:
- கடவுளுடன் உறவாடுகிறோம்:
- கடவுள் - அனுபவத்திற்குள் நுழைகிறோம்: இதனால்

**ஈ) விளைவு:**

- கடவுளுக்கும் கிறிஸ்துவால் மீட்கப்பட்ட மானிடக் குலத்திற்கும் இடையே உள்ள உறவு மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது.
- இங்கு கடவுளின் முதன்மையான ஈடுபாடும் மானிடரின் உண்மையான உடன்பாடும் வெளிப்படுகின்றன.

எனவே திருவழிபாடு மூவொரு கடவுளை நம்பியே, அவரைச் சார்ந்தே இருக்கிறது என்பதுதான் அதன் உச்சம்.

### 13 வழிபாட்டு முறைகளில் எத்தனை வகையான பிரிவுகள் இருக்கின்றன?

இரு பெரும் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் சில குடும்பங்கள் உண்டு.

**1. கிழக்கிந்திய வழிபாட்டு முறைகள்**

1.1 அலெக்சாந்திரியன் குடும்பம்

1.1.1 காப்தீக் வழிபாட்டுமுறை

1.1.2 எத்தியோப்பியன் வழிபாட்டுமுறை

1.2 அந்தியோக்கியன் அல்லது மேற்கு சிரியா குடும்பம்

1.2.1 சிரியன் அல்லது சீரோ அந்தியோக்கியன் வழிபாட்டுமுறை

1.2.2 மாரோனைட் வழிபாட்டு முறை

1.2.3 மலங்காரா வழிபாட்டு முறை

1.3 பைசாந்தீன் குடும்பம்

1.4 அர்மேனியக் குடும்பம்

1.5 பெர்சியன் அல்லது கிழக்கு சிரியன் குடும்பம்

1.5.1 அசிரியன் அல்லது கல்தேயன் வழிபாட்டுமுறை

1.5.2 மலபார் வழிபாட்டு முறை

**2. மேற்கத்திய வழிபாட்டு முறைகள்**

2.1 உரோமை வழிபாட்டு முறை (உரோம்)

2.2 ஆப்ரிக்கா வழிபாட்டு முறை (வட ஆப்பிரிக்கா)

2.3 அம்புரோசியன் வழிபாட்டு முறை (மிலான், இத்தாலி)

2.4 கல்லிக்கன் வழிபாட்டு முறை (பிரான்சு)

2.5 இஸ்பானிக் வழிபாட்டு முறை (ஸ்பெயின்)

2.6 செல்டிக் வழிபாட்டு முறை (அயர்லாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அமெரிக்க விஜயம்

# பாப்பரசரைச் சந்திக்க ஆர்ஜென்டீனாவிலிருந்து பழமையான வேனில் 13,000 மைல் பயணம்!


## பாப்பரசரை மனம் நெகிழ வைத்த குடும்பம்!

அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பாப்பரசர் பிரான்சிஸை சந்திப்பதற்காக ஆர்ஜென்டீனாவிலிருந்து பழைமையான வேன் ஒன்றில் 13,000 மைல் தூரம் பயணித்து பிலடெல்பியா பிராந்தியத்தை வந்தடைந்த குடும்பமொன்று பாப்பரசரை மனநெகிழ்ச்சியடைய வைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கதிர் வோக்கர் மற்றும் நோயல் ஸெம்போ ரெயின் ஆகியோரே தமது பிள்ளைகளான காலா (12 வயது), டிமல் (8 வயது), மியா (5 வயது) மற்றும் கர்மின் (3 வயது) ஆகியோருடன் 12 எல்லைக் கடவைகளைக் கடந்து இந்தச் சிரமமான பயணத்தை மேற்கொண்டிருந்தனர். கதிர் வோக்கரும் நோயல் ஸெம்போரெயினும் இந்தப் பயணத்தின்பொருட்டு தமது வேலைகளையும் இராஜினாமாச் செய்திருந்தனர்.

இந்நிலையில் மேற்படி குடும்பத்தின் பயணம் தொடர்பில் அறிந்த பாப்பரசர் அவர்களது இந்தப் பயணத்தால் மன நெகிழ்ச்சிக்குள்ளானதாக வத்திக்கான் பேச்சாளரான அருட்தந்தை பெடெறிக்கோ லொம்பார்டி தெரிவித்தார். பாப்பரசர் சென். சார்ள்ஸ் பெரோமியோ பாடசாலைக்கு இக்குடும்பத்தை வரவழைத்து அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது பாப்பரசர், "நீங்களா பிரேசிலிய புயனொஸ் அயர்ஸிலிருந்து வந்த குடும்பத்தினர்? உங்களுக்குப் பித்தா பிடித்துள்ளது?" எனக் கனிவுடன் அவர்களிடம் வினவியுள்ளார். அவர்கள் அனைவரையும் அரவணைத்து ஆசீரளித்தார்.





## திருஅவை, தாய்மைப் பண்பைக் கொண்டிருக்க வேண்டும் – திருத்தந்தை

அன்னை மரியாவைப்போல், திருஅவையும் தாழ்ச்சி, இரக்கம், மன்னிப்பு மற்றும் கனிவு ஆகிய பண்புகளின் அடிப்படையில் வெளிப்படும் தாய்மைப் பண்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்தார்.

கடந்த செப்ரம்பர் மாதம் 15ம் திகதி கொண்டாடப்பட்ட துயருறும் அன்னை மரியா திருநாளை முன்னிட்டு, தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய திருத்தந்தை, இயேசு, சிலுவையில் தொங்கியபோது, அன்னை மரியாவை நம் அனைவரின் தாயாக ஒப்படைத்த நிகழ்வை மையமாக வைத்து, கருத்துக்களை வழங்கினார்.

ஒருவித ஆதரவற்ற நிலையை உணரும் இன்றைய உலகில், அன்னை மரியா, தாய்க்குரிய பாசத்துடன் நம்மை வழிநடத்துகிறார் என்று கூறிய திருத்தந்தை, அன்னை மரியாவின் தாய்மைப் பண்பே திருஅவையின் தாய்மைப் பண்பாக விளங்கவேண்டும் என்றும் எடுத்துரைத்தார். தாய்மை இருக்குமிடத்தில் அமைதியில் வளர்வதற்குரிய சூழல் இருக்கும் என்று தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, ஒரு குழந்தையை நோக்கி புன்னகைத்து, அக்குழந்தையையும் புன்னகைக்கச் செய்வது, மிக உன்னதமான செயல் என்றார்.

## இலங்கை ஆயர் பேரவையின் உத்தியோகபூர்வ நியமனம்

அண்மையில் நடந்து முடிந்த இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் கூட்டத்தில், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் கல்வி, மறைக்கல்வி, வேதாகமப் பணிக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் உபதலைவராகவும், திருவழிபாடு பண்பாட்டிற்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் உப தலைவராகவும் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் நியமனம் 2015 ஆண்டு ஆவணி மாதம் 20ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# வீதிக் காவல் தடையைத் தாண்டி வந்து பாப்பரசரிடம் கடிதத்தைக் கையளித்த 5 வயதுச் சிறுமி

## பாப்பரசரின் அமெரிக்க விஜயத்தின்போது சம்பவம்

அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பாப்பரசர் பிரான்சிஸ் வாஷிங்டன் நகரிலுள்ள வீதியொன்றினூடாகத் தனது விசேட வாகனத்தில் பயணித்தபோது, 5 வயதுச் சிறுமியொருவர் ஒருவாறு பாதுகாப்புத் தடையைத் தாண்டி வந்து, பாப்பரசரிடம் தனிப்பட்ட கடிதமொன்றைக் கையளித்து பாப்பரசரது மட்டுமல்லாது அங்கு கூடியிருந்த அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

கொன்ஸ்ரிரியூஷன் வீதியின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புத்தடைகளுக்கு அப்பால் பாப்பரசரைக் காணும்முகமாகக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் சோபி குரூஸ் என்ற மேற்படி சிறுமியும் ஒருவராவார். சோபி தனது குடும்பத்தின் சகிதம் அங்கு வந்திருந்தார். பாப்பரசரின் வாகனம் சோபியும் அவரது குடும்பத்தினரும் நின்ற இடத்தை நெருங்கி வரவும் அவரது தந்தையான ராவுல் குரூஸ் சட்டென சோபியைத் தூக்கி பாதுகாப்புத் தடைக்கு அப்பால் இறக்கிவிட்டார்.

இந்நிலையில் சோபி தனது கையில் கடிதத்துடன் பாப்பரசரின் வாகனத்தை நோக்கிச் செல்லவும் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரைத் தடுக்க முயற்சித்தனர்.

எனினும் வாகனத்திலிருந்த பாப்பரசர் சோபியை அவதானித்து அவரைத் தன்னிடம் வருவதற்கு அனுமதிக்குமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு சமிஞ்ஞை செய்துள்ளார்.

மெக்ஸிக்கோவின் ஒஸாகா மாநிலத்திலிருந்து அமெரிக்காவுக்கு வந்த சட்டவிரோத குடியேற்றவாசிகளான பெற்றோருக்கு பிறந்த சோபி, சட்டவிரோத குடியேற்றவாசிகள் என்ற வகையில் தனது பெற்றோர் நாடுகடத்தப்பட்டு தமது குடும்பம் பிரிய நேரிடும் என அஞ்சுவதாகவும் அதனால் பாப்பரசர் தனது தாய் மற்றும் தந்தைக்கும் அமெரிக்காவிலுள்ள ஏனைய மில்லியன்கணக்கான குடியேற்றவாசிகளுக்கும் அமெரிக்காவில் தொடர்ந்து தங்கியிருக்க உதவ வேண்டும் எனவும் வலியுறுத்தும் கடிதத்துடன், பாப்பரசர் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கரங்களைப் பிடித்திருப்பதாக காண்பிக்கும் ஓவியமொன்றையும் பாப்பரசரிடம் கையளித்தார்.



## நற்கருணை மாநாட்டில் திருத்தந்தையின் பிரதிநிதியாக கர்தினால் மல்கம்

எதிர்வரும் கார்த்திகை மாதம் 12 ஆந் திகதி – 15ஆந் திகதி வரை இந்தியாவின் மும்பாய் நகரில் நடைபெறும் தேசிய நற்கருணை மாநாட்டில் திருத்தந்தையின் சிறப்புத் தூதுவராகக் கலந்துகொள்வதற்கு கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் நியமித்திருக்கின்றார்.

இதன் முதலாவது மாநாடு 1964ஆம் ஆண்டு இதே இடத்தில் திருத்தந்தை 6வது சின்னப்பரின் நேரடியான பங்குபற்றுதலோடு இடம்பெற்றது. இதன் 50வது ஆண்டு நிறைவையொட்டியே இம்மாநாடு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்களாகிய இந்திய ஆயர் பேரவையின் தலைவரும், ஆசிய ஆயர் பேரவையின் தலைவரும் பம்பாய் மறைமாவட்டத்தின் பேராயருமாகிய அதிமேதகு ஒஸ்வோல்ட் கர்தினால் கிறாசியஸ் தெரிவித்துள்ளார்.

கர்தினால் மல்கம் றஞ்சித் அவர்கள் இம்மாநாட்டின் இறுதித் திருப்பலியை நிறைவேற்றுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாப்பரசர் பிரான்சிஸின் அமெரிக்கப் பயணத்தின் நிகழ்வுகள்

பாப்பரசர் பிரான்சிஸ் வரலாற்று முக்கியத்துவம்மிக்க விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்தார். கடந்த செப்ரம்பர் 22ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை அவர் அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

மேரிலாண்டிலுள்ள அன்ட்றூ விமானப்படைத்தளத்தில் தரையிறங்கிய பாப்பரசரை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது குடும்பத்தினர் சகிதம் வரவேற்றார். இந்த நிகழ்வில் உப ஜனாதிபதி ஜோ பிடென் உட்பட பெருந்தொகையான முக்கியஸ்தர்களும், பிரமுகர்களும், மதகுருமாரும் பங்கேற்றனர்.


பாப்பரசருக்கு இராணுவ கௌரவம் அளிக்கப்பட்டது. இதன்போது அங்கு கூடியிருந்த அரசியல்வாதிகளும் உரோமன் கத்தோலிக்க மதகுருமாரும் போதகர்களும் பாடசாலைச் சிறுவர்களும் அவரை வரவேற்கும் வகையில் கோஷம் எழுப்பினர்.

பாப்பரசர் கியூபாவுக்கான 4 நாள் விஜயத்தை பூர்த்திசெய்துகொண்டு அமெரிக்காவுக்கான இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒபாமாவுடன் குறுகிய நேரம் உரையாடியதையடுத்து பாப்பரசர், மோட்டார் வாகனப் பவனியாக வாஷிங்டனிலுள்ள வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்றார். பாப்பரசரின் வரவையொட்டி வாஷிங்டன் நகரின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது. தொடர்ந்து அவர் 23ஆம் திகதி வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதியுடன் சந்திப்பை மேற்கொண்டுள்ளார். 24ஆம் திகதி அமெரிக்கப் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். தொடர்ந்து அவர் வாஷிங்டன் டிசியிலுள்ள சென். பற்றிக் தேவாலயத்துக்கு விஜயம் செய்தார். இதனையடுத்து பாப்பரசர் நியூயோர்க் நகருக்கு பயணத்தை மேற்கொண்டார். அவர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்கான விஜயத்தை பூர்த்தி செய்துகொண்டு உரோம் நகருக்குத் திரும்பினார்.

400 வருடங்கள் பழமையான யாழ்.கோட்டையிலிருந்த

## புதுமை மாதா சொரூபம் இந்தியாவில் கண்டுபிடிப்பு இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை



17ம் நூற்றாண்டுக் காலத்தில் போர்த்துக்கேயரால் யாழ்ப்பாணக் கோட்டையில் அமையப்பெற்ற 400 வருடங்கள் பழமைவாய்ந்த புதுமை மாதா திருச்சொரூபம் தற்போது இந்தியாவில் கோவா நகரில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதனை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது, 17ஆம் நூற்றாண்டுக் காலத்தில் போர்த்துக்கேயரால் யாழ்ப்பாணம் கோட்டையில் புதுமை மாதா திருச்சொரூபம் நிர்மாணிக்கப்பட்டது. அதன் பிற்பாடு ஒல்லாந்தரினால் யாழ்ப்பாணக் கோட்டை கைப்பற்றப்பட்டு அங்கிருந்த ஆலயம் புரட்டஸ்தாந்து ஆலயமாக மாறியமையால் இச்சொரூபம் களவாடப்பட்டு எங்கிருக்கின்றது என்பது தெரியாதிருந்தது.

கடந்த காலங்களில் இச்சொரூபம் இந்தியாவின் கோவா நகரில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதனை மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்காமல்போனது.

ஆனாலும் அண்மைக் காலங்களில் கோவாவுக்கு சென்றுவரும் இலங்கை யாத்திரிகர்கள் அங்குள்ளவர்களுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் விளைவாக அச்சொரூபம் போன்று மாதிரி சொரூபம் ஒன்றைத் தமக்கு உருவாக்கித் தந்தபின்னர் அச்சொரூபத்தை கொண்டுசெல்லுமாறு கூறப்பட்டுள்ளது. இதன்விளைவாக அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு அச்சொரூபத்தை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

17ஆம் நூற்றாண்டில் யாழ். கோட்டையில் அமையப்பெற்ற புதுமை மாதா ஆலயம் தற்போது குருநகர் பாங்ஷால் வீதியில் அமையப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

**மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை இப்பகுதியில் இடம்பெறும்.**

# திருக்குடும்ப சபை





திருக்குடும்ப சபையின் ஸ்தாபகர்

இலங்கையில் கிறிஸ்துவை அறிவித்த பெருமை ஐரோப்பிய நாட்டிலிருந்து நற்செய்திப் பணிக்காக வருகைதந்த ஐரோப்பியக் குருக்கள், துறவிகளையே சாரும். இவர்கள் அனைவரும் நற்செய்தியின் தூதுவர்களாக, பல்வேறு துறவற சபைகளில் இருந்து இந்நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள்.

இவர்களில் சிறப்பாகப் பெண் துறவற சபைகளில் திருக்குடும்ப சபையே இலங்கையில் கால்பதித்த முதல் துறவற சபையாகும். இவர்கள் 1862ம் ஆண்டு கார்த்திகை 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கால்பதித்து பின் இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் பரவி, தம் வாழ்வின் பிரசன்னத்தாலும், அன்புப் பணிகளாலும், பலரின் மனங்களைக் கவர்ந்து கடவுள்பால் அவர்களை அழைத்துச் சென்றனர். இவர்கள் நற்செய்தியை மனித மனங்களில் பதியவைக்க "இறைவன் மாத்திரமே" என்ற சபையின் மனப்போக்குடன், வீரத்துவ உணர்வுகளோடு காலத்தின் தேவையை நோக்கி வெளிப்படுத்தப்பட்ட பணிகளை முன்னெடுத்துச் சென்றனர்.

17ம் நூற்றாண்டில் பிரான்சியப் புரட்சியில் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்துவதற்கென போர்டோவைச் சேர்ந்த பியர் பியன்வெனு நோஆய் என்னும் பெயர் கொண்ட குருவானவரால் 1820இல் திருக்குடும்ப சபை ஆரம்பிக்கப்பட்டது. 1822 மாசித் திங்கள் 3ஆம் நாளில் நற்கருணை ஆசீர்வாதத்தின்போது தோன்றி ஆசீர்வதித்த இயேசுவின் உண்மையான பிரசன்னம் பல போராட்டங்கள், சவால்கள் மத்தியில் திருக்குடும்ப சபையின் வாழ்வும் பணியும் தேவை என்பதை உறுதிப்படுத்தியது.

"முன்னேறிச் செல்லுங்கள்" என்ற ஸ்தாபகரின் ஆசிமொழிக்கிணங்க இச்சபைச் சகோதரிகள் நான்கு கண்டங்களிலுள்ள 24 நாடுகளில் பரந்துசென்று பணியாற்றி வருகின்றனர். இன்று எமது சபை ஐந்து வகையான அழைத்தல்களைத் தன்னகத்தே கொண்ட பரந்து விரிந்த நோக்கோடு செயலாற்றுகின்றது. ஒரு தந்தை - பிள்ளை என்ற உறவுக்குள் அனைவரையும் அனைத்தையும் ஒரு குடும்பமாக ஒன்றிணைக்கின்ற பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. இவர்கள்:

1. திருக்குடும்ப அப்போஸ்தலிக்க துறவிகள்
2. திருக்குடும்ப தியான யோக துறவிகள்
3. திருக்குடும்ப திருமட சார்பற்ற குழு
4. திருக்குடும்பப் பொதுநிலையினர்
5. திருக்குடும்பக் குருக்கள்

### 1) திருக்குடும்ப அப்போஸ்தலிக்க துறவிகள்

முதல் பெண் துறவிகளை இலங்கைத் திருச்சபைக்கு அழைத்த பெருமை யாழ்ப்பாணத்தையும் அமலமரித் துறவறக் குருக்களையுமே சாரும். அப்போது யாழ் ஆயராக விளங்கிய சமேரியா (அ.ம.தி.) ஆண்டகை அவர்கள் இளைஞர்கள் அறிவுத்துறையிலும், ஒழுக்கநெறிகளிலும், . விசுவாசத்திலும் உயர்ந்தோர் ஆகவேண்டும் என்ற நோக்கோடு கல்வித்துறையை மேம்படுத்த முனைந்தார். அதில் பெண்களுக்கான கல்வியைத் திருக்குடும்ப துறவற அப்போஸ்தலிக்க சகோதரிகள் முன்னெடுத்தனர். அத்துடன் அநாதைகள், நலிவுற்றோருக்குப் புகலிடமாகவும், நோயாளரைப் பராமரிப்பவர்களாகவும், காலத்தின் தேவைக்கு இவர்கள் கைகொடுத்து நின்றார்கள்.

இவர்கள் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பெண்கள் கல்வியிலும், அவர்களது ஆளுமை உருவாக்கத்திலும், அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதிலும் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றி வருகின்றனர். 153வது ஆண்டில் கால்பதிக்கும் வேளையில் இச்சகோதரிகளின் வாழ்வையும், பணியையும் மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது. இச்சகோதரிகள் அயராது உழைப்பதோடு, பல சவால்களுக்கும் முகம் கொடுத்து, நாட்டின் பல பகுதிகளிலும் (11 மாவட்டங்களில்) துணிவோடு பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டில் தோன்றிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறப்பாகத் தொடர்ச்சியான 30 வருடப் போர்ச்சூழலில் எல்லோர்க்கும் எல்லாமாக மக்களோடு மக்களாகப் பயணித்து மக்களுக்கு நம்பிக்கையூட்டி வாழ்வுகொடுப்பதில் முனைந்து செயற்பட்டனர். திருக்குடும்ப அப்போஸ்தலிக்க சகோதரிகள் முன்னெடுக்கின்ற இக்காலத்துப் பிரதான பணிகள்;

1. கல்வி (முறைசார்ந்த, முறைசார்பற்ற)
2. இளம் பிள்ளைகளின் வாழ்வை வளப்படுத்த விடுதிச்சாலைகள் நடத்தல்.
3. வேறுபட்ட திறனுள்ள சிறுவரைப் பராமரித்தல் (Differently abled)
4. தொழுநோயாளர் பராமரிப்பு
5. உளவள ஆற்றுப்படுத்தல்கள்
6. மலையக மக்களின் பணி
7. முன்பள்ளிச் சிறுவர் பாடசாலை
8. மறைக்கல்வி வகுப்பு, அருட்சாதன ஆயத்தங்கள்
9. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரப் பயிற்சிகள்
10. ஏனைய துறவற சபைகளுடன் இணைந்த நீதி சமாதானத்துக்கான முன்னெடுப்புக்கள்

### திருக்குடும்ப தியான யோக துறவிகள்

1822ஆம் ஆண்டில் நற்கருணை ஆசீர்வாதம் எமது சபையின் உருவாக்கத்திற்கு ஓர் ஆதாரம். இந்த உறுதிப்பாட்டைத் தந்த இறைவனுக்கு நன்றியாக, புகழ்ச்சியாக ஆராதனையும், செபமும் நிறைந்த குழுமங்களாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடனும் சகல அழைத்தல்களுக்கும் ஆன்மீகப் பலம் பெற்றுத்தருவதற்குமாக இக்குழுவை 1858ஆம் ஆண்டு எமது ஸ்தாபகர் உருவாக்கினார். தியானயோக சகோதரிகள் திருக்குடும்ப சபையின் மறைபொருளாக, அதன் உயிர்நாடியாக இருக்கின்றனர். இச்சகோதரிகளுக்கான இல்லம் 1975ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள நாகொட என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது. இன்று திருக்குடும்ப சபையின் தியானயோக அழைப்பின் இல்லங்கள் உலகிலே பிரான்ஸ், ஸ்பெயின், இலங்கை, ஆர்ஜென்ரீனா ஆகிய நான்கு தேசங்களில் அமைந்துள்ளன.

### திருக்குடும்ப சபையின் அர்ப்பணிக்கப்பட்ட திருமட சார்பற்ற குழு

இக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் இறைவனின் அழைப்புக்கு ஆம் என்று பதில் அளித்து, வாழ்வில் முதிர்ச்சிபெற்ற கிறிஸ்தவப் பெண்களாக சபையின் நோக்குக்கும், அருங்கொடைக்கும் ஏற்ப வாழ்கின்றனர். துறவற வாழ்விற்கு வேண்டிய நற்செய்தி அறிவுரைகளான கீழ்ப்படிதல், விரத்தத்துவம், ஏழ்மை என்னும் வாக்குறுதிகளுள் தம் வாழ்வை ஒருமுகப்படுத்தி, உலகின் மத்தியிலே புளிக்காரமாக வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு உலகிலே, தமது குடும்பங்களிலே வாழ உரிமையுண்டு. இவர்களது அழைத்தலின் தனித்துவமும், மகத்துவமும் இறையரசின் பண்புகளை உலகில், குடும்பங்களில், தொழில் நிலையங்களில், பங்குத்தளங்களில் மறைவாக வாழ்ந்து பணி செய்வதே.

### திருக்குடும்ப பொதுநிலையினர்

அனைத்தையும், அனைவரையும் ஒரு தந்தை - பிள்ளைகள் என்ற உறவுக்குள் கொண்டுவருகின்ற பணியை "இறைவன் மாத்திரமே" என்ற மனநிலையிலும், ஆன்மீகத்திலும் குடும்பங்களாகத் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரிகின்ற குழுக்களே இவர்கள்.

இவர்கள் தாய், தந்தை பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து குடும்பமாக திருக்குடும்பத்தை முன்மாதிரிகையாகக் கொண்ட உறவுள்ள, விசுவாசம் நிறைந்த, பகிர்ந்து வாழ்கின்ற, ஆரம்பக் கிறிஸ்தவ குடும்பங்கள்போல் வாழ்வதே இவர்களது வாழ்வும், பணியும் ஆகும்.

### திருக்குடும்பக் குருக்கள்

இவர்கள் சேர்ந்திருக்கின்ற தலத்திருச்சபையின் ஆயருக்குப் பணிந்து, தமது பணித்தளங்களில் திருக்குடும்பத்தின் நல் முன்மாதிரியான வாழ்வை முன்னெடுக்கின்றார்கள். மிகவும் ஆன்மீக வாஞ்சையுடன் மக்களின் உடல், உள, ஆன்மீக விடுதலையைக் கொடுக்கும் பணியை ஆர்வத்துடன் செய்யத் தம்மை அர்ப்பணிக்கின்றார்கள். மிகவும் எளிமையான வாழ்வைப் பின்பற்றுவதுடன், ஆயருக்குப் பணிவுள்ளவர்களாகவும், திருக்குடும்ப சபையின் ஏனைய அங்கத்தவர்களின் ஆன்மீக வழிகாட்டிகளாகவும் வாழ்கின்றார்கள்.

இந்த ஐந்து அழைப்புக்களையும் தன்னகத்தே கொண்ட திருக்குடும்ப சபை இலங்கை மண்ணில் 153 ஆண்டுகளின் நிறைவைக் கண்டு மகிழ்கின்றது. இதன் வாழ்வினதும், பணியினதும் வளர்ச்சியும் நிறைவும் தலத்திருச்சபைகளின் ஆயர்களையும், குருக்களையும் மக்கள் எல்லோரையும் சாரும். தொடர்ந்தும் இம்மண்ணின் மக்களாக, காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப பணியாற்ற உங்கள் அனைவரின் உறவுள்ள ஒத்துழைப்பை திருக்குடும்ப சபையினர் வேண்டி நிற்கின்றனர்.

---

காணாமற்போகச் செய்யப்படுதலுக்கு எதிராக

# மன்னாரில் எழுந்த குரல்கள்



மன்னார் பிரஜைகள் குழு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களின் சங்கம் ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் மன்னார் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள டிலாசால் கிட்ஸ் கம்பஸ் பாடசாலையில் காணாமற்போகச் செய்யப்படுவதற்கு எதிரான சர்வதேச தினம் கடந்த செப்ரம்பர் மாதம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு வடக்கு கிழக்கு உள்ளடங்கிய எட்டு மாவட்டங்களில் இருந்து கணவர்மாரை இழந்த மனைவியரும், பிள்ளைகளை இழந்த பெற்றோரும், சகோதரர்களை இழந்த உடன் பிறப்புக்களும் என பெருந்தொகையானோர் வருகை தந்திருந்தனர்.

இரண்டு நிமிட அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. அகவணக்கத்தைத் தொடர்ந்து ஒரு பாடல் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இந்தப் பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அந்தக் கட்டடத்தில் கூடியிருந்த மக்களின் கண்களில் இருந்து கண்ணீர் மல்கியது.

தொடர்ந்து சுடரேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. முதலில் சிவில் சமூகப் பேச்சாளரும், ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியுமான அருட்பணி. எழில் இராஜேந்திரன் சுடரை ஏற்றிவைத்தார். தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுத்தலைவர் அருட்பணி. இம்மானுவேல் செபமாலை, மாகாண சபை உறுப்பினர் சிராய்வா, அருட்பணி. தமிழ்நேசன் அடிகளார், இந்து சமயக் குரு ஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தீபச்சுடர் ஏற்றும் வைபவம் நடைபெற்றது. காணாமற்போகச் செய்யப்படுவதற்கு எதிரான சங்கங்களில் இருந்து வருகைதந்த மாவட்ட உறுப்பினர்கள் தீபச்சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வழிபாடுகள் இடம்பெற்றன. இந்து சமய வழிபாட்டை இந்து சமயக்குரு ஸ்ரீ பாஸ்கரன் குருக்களும், கிறிஸ்தவ மத வழிபாட்டை தமிழ்நேசன் அடிகளாரும் நடத்திவைத்தனர்.

வரவேற்புரையை திரு. மாட்டீன் டயஸ் அவர்கள் நிகழ்த்தினார். தலைமை உரையை மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி. இம்மானுவேல் செபமாலை நிகழ்த்தினார். அவர் அங்கு உரையாற்றுகையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசியம் என வற்புறுத்தியதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இது தொடர்பான மனு அனுப்பிவைக்கப்பட்டது என்று கூறினார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் நம்பிக்கை இல்லை என்றும், இவர்களிடம் வழங்கும் வாக்குமூலங்கள் பிரயோசனம் அற்றதெனவும், உள்நாட்டு விசாரணைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரும் ஆதரவு வழங்கி வருகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

காணாமற்போகச் செய்யப்பட்டோரின் சங்கத்தின் மாகாணத் தலைவி திருமதி உதயச்சந்திரா தனது உரையில், நாங்கள் இன்று கைவிடப்பட்டவர்களாக மாற்றப்பட்டுள்ளோம் என்றும், எங்கள் கண்களில் இருந்து வெளிவருவதற்கு இனி கண்ணீர் இல்லை எனவும், அனைத்தும் வற்றிவிட்டது எனவும் குறிப்பிட்டார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கும் வாய்ப்பு ஒன்று கிடைத்ததாகவும் காணாமற் செய்யப்பட்டோரின் தொடர்பில் தான் கதைத்தபோது ரணில் அவர்கள் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்பதற்கு வரவில்லை எனவும் வாக்குகளைப் பெறுவதற்குத்தான் வருகை தந்ததாகவும் கூறினார். 33 வருடங்களின்பின் விடுதலையாகி வந்துள்ள 73 வயதுடைய முதியவர் ஒருவரைத் தான் சந்தித்ததாகவும் அவர் முன்னைய சம்பவங்கள் குறித்து தனக்கு ஞாபகம் இல்லையெனக் கூறியதுடன், எனது பிள்ளையின் படத்தை காட்டியபோது அவர்கள் நல்லா இருக்கிறார்கள். உன்னிடம் வருவார்கள் எனக்கூறியதாகவும் சொல்லி அழத்தொடங்கினார்.

அரங்கில் கூடியிருந்தவர்கள் தங்களின் பிள்ளைகளின் படங்களைக் கையில் பிடித்தவாறு அழ ஆரம்பித்தார்கள். இதன்காரணமாக நிகழ்வு தாமதம் அடைந்தது. பின்னர் ஏற்பாட்டாளர்கள் ஒருவாறு மக்களுக்கு ஆறுதல்கூறி மீண்டும் நிகழ்வை ஆரம்பித்தனர்.

ஏற்கனவே ஒலிபரப்பாகிய பாடலை ஒலிபரப்புவதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது அவர்கள் தலையசைக்க "அப்பாவைக் கூட்டி வாங்க யேசப்பா" என்ற பாடல் ஒலிபரப்பப்பட்டது. பாடல் இடம்பெற்ற நேரத்தில் மக்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிவில் சமூகப் பேச்சாளரும், ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியுமான எழில் ராஜேந்திரன் தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க ஆதரவு வழங்குவார்கள் எனக் கூறப்பட்டது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# அகதிக் குடும்பங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் ஐரோப்பியத் திருச்சபைகளிடம் பாப்பரசர் வலியுறுத்து

ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு திருச்சபையும் சமயம் சார்ந்த சமூக அமைப்புக்களும் அகதிகளாக வரும் குடும்பங்களில் ஒன்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வத்திக்கான் சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் உரையாற்றிய பாப்பரசர் பிரான்சிஸ், அனைத்து நாடுகளுக்குமிடையில் அனைத்து மக்களுக்குமிடையில் ஒற்றுமை, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு திருச்சபைகளும் மதம் சார்ந்த சமூகங்களும் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்றார். இதற்கு முன்னுதாரணமாக வத்திக்கானில் உள்ள இரண்டு திருச்சபைகள் இரண்டு குடும்பங்களை ஏற்றுக்கொள்ளும், அவ்விரு குடும்பங்களும் போர் மற்றும் பசியினால் மரணம்வரை சென்று திரும்பியுள்ளன.

அகதிகளாக ஐரோப்பாவுக்குள் வரும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும். சிரியா, எகிப்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் உள்நாட்டுப் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்கள் ஐரோப்பாவுக்குப் படை எடுத்தவண்ணம் உள்ளனர். எனினும் ஒருசில ஐரோப்பிய நாடுகளே அவர்களைத் தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்கின்றன. இதனால் அவர்கள் மேலும் பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே அனைவரும் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட வேண்டும் என்றார் பாப்பரசர்.

இந்த உரையை நிகழ்த்தும்போது பாப்பரசர் பிரான்சிஸ் அன்னை திரேசாவை மேற்கோள்காட்டிக் குறிப்பிட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

# கிளரீசியன் சபை உலக அவை உறுப்பினர்களுடன் திருத்தந்தை



தனி மனிதர்களிடமும், துறவுக் குழுமங்களிலும் மகிழ்வு இல்லாதபோது, மகிழ்வின் சாட்சிகளாக அவர்கள் வாழ முடியாது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிளரீசியன் மறை பணியாளர்களின் பிரதிநிதிகளிடம் கூறினார்.

உலகளாவிய கிளரீசியன் மறை பணியாளர்களின் உயர்மட்ட உலக அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள உரோம் நகர் வருகைதந்திருக்கும் 120க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை, திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை, இத்துறவற சபையின் அகில உலகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும், மேத்யு வட்டமட்டம் அவர்களின் வாழ்த்துக்கு நன்றிகூறி, தன் உரையைத் துவக்கினார். இத்துறவுச் சபையின் உலக அவை, "நற்செய்தி மகிழ்வின் சாட்சிகளும், தூதர்களும்" என்ற மையக்கருத்துடன் கூடியுள்ளத்தைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உள்ள இம்மகிழ்வு, தூய்மைப்படுத்தப்பட்டு, பகிரப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கிறிஸ்து நம் வாழ்வின் மையமாகும்போது, இந்த மகிழ்வுக்கு நாம் சாட்சிகளாகவும், தூதர்களாகவும் மாறமுடியும் என்று திருத்தந்தை தன் உரையில் விலியுறுத்தினார். மறைபரப்பு நோக்கத்தைக் கொண்டுள்ள கிளரீசியன் துறவுசபை, உலகிலிருந்து எழும் பல்வேறு குரல்களைக் கேட்டு, பகுத்தறியும் திறன் கொண்டதாக விளங்கவேண்டும் என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.

புனித அன்டனி மரிய கிளாரெட், தன் ஆயர் இலச்சனையில் பொறித்திருந்த "கிறிஸ்துவின் பேரன்பு நம்மை ஆட்கொள்கின்றது" என்ற வார்த்தைகள், நம்மையும் ஆட்கொண்டு, வழிநடத்தவேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார். இலங்கையிலிருந்து அருட்பணி கலிஸ்ரஸ் யோசப் இக்கூட்டத்தில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாவுத் தண்டனை வேண்டாம் உலகத் தலைவர்களிடம் பாப்பரசர் வலியுறுத்து

சாவுத் தண்டனையை நீக்குமாறு உலக நாடுகளிடம் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார். ஐ.நாவின் 70ஆவது பொதுச் சபைக் கூட்டம், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி தொடங்கியது. இந்த அமர்வின் ஆரம்ப உரையை பாப்பரசர் பிரான்சிஸ் நிகழ்த்தினார். இதன்போதே சகல நாட்டுத் தலைவர்களிடமும் அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

## கண்ணாடி வாங்கச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ்

புதிய மூக்குக் கண்ணாடி ஒன்றை வாங்க, உரோம் நகரில் உள்ள கண்ணாடிக் கடைக்குத் திடீரெனப் பயணம் செய்தார் பாப்பரசர் பிரான்சிஸ். பாப்பரசர் வருவதையறிந்த கடையின் உரிமையாளர் திகைத்துப் போனார். சுமார் அரைமணி நேரம் கடையில் பாப்பரசர் இருந்ததையடுத்து அந்தப்பகுதி பரபரப்புடன் காணப்பட்டது.

## உலகின் நல்லிணக்கத்திற்கான உதாரணமாக அமெரிக்க - கியூப உறவின் மறுமலர்ச்சி பாப்பரசர் புகழாரம்



கியூபாவுக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த பாப்பரசர் பிரான்சிஸ், கத்தோலிக்க திருச்சபை தமது இலக்குகளை அடைவதற்கான சுதந்திரத்தினையும், பெறுமானங்களையும் கொண்டிருக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார்.

முழு உலகத்தினதும் நல்லிணக்கத்திற்கான உதாரணமாக அமெரிக்கா - கியூபாவுக்கிடையிலான உறவுகள் முன்னேற்றம் அடைந்துவருவதையும் பாராட்டி இருக்கும் பாப்பரசர், இம்முயற்சியில் அமெரிக்காவும் கியூபாவும் பூரண வெற்றிகொள்ள வேண்டுமெனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு தமது பயணத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் கியூபாவில் நான்கு நாட்களைக் கழித்த பாப்பரசர், ஹவானாவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரட்சி சதுக்கத்தில் திருப்பலியிலும் கலந்துகொண்டிருந்தார்.

விமான நிலையத்தில் இருந்து பாப்பரசர் தங்கியிருக்கும் வத்திக்கான் தூதரக குடியிருப்புவரை வீதியின் இரு மருங்கிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்து பாப்பரசரை வரவேற்றிருந்தனர்.

அமெரிக்கா - கியூபா இடையிலான உறவுகள் மேம்படுவதற்கு பாப்பரசரே முக்கிய காரணமெனக் கூறப்படும் நிலையில், பாப்பரசரின் முயற்சிக்காக கியூப ஜனாதிபதி ரவூல் காஸ்ரோ நன்றி தெரிவித்திருந்தார்.

'எம் மத்தியில் பாப்பரசரால் சமாதானத்தை நிலைநாட்ட முடியுமென நம்புகின்றேன். தற்பொழுது சரியான தருணம் ஏற்பட்டுள்ளது. நான் இளமைப் பருவத்தில் இருந்தபோது இவ்வாறான விடயங்களைச் செய்வதென்பது மிகவும் நெருக்கடிக்குள் உள்ளாகியிருந்தது. ஆனால், தற்பொழுது நிலைமை அவ்வாறு இல்லை, சிறந்த முன்னேற்றம் காணப்படுகின்றது.

கத்தோலிக்க திருச்சபையால் மேற்கொள்ளப்படும் சமூகப் பணிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்பதை பாப்பரசர் வலியுறுத்த வேண்டுமென கோட்பாடுகளை நம்புவோரை சென்றடைவதற்கான ஆவணப்படம் ஒன்றினை தயார்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஜேங்கி கொன்சலீஸ் என்பவர் கூறியுள்ளார். எமது நாடு மிக மோசமான பாதிப்புகளை சந்தித்துள்ளது. கியூபர்கள் மத்தியில் பாப்பரசர் நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமென நம்புகின்றேன். சில காலங்களில் இராணுவத்தில் இருந்த காரணத்தினால் அல்லது கம்யூனிஸக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தினால் பெரும்பாலானோர் தேவாலயங்களுக்கு வருகை தந்திருக்கவில்லை. சமாதானத்துடன் வாழ்வதற்கான வழிமுறைகள் தொடர்பாக பாப்பரசர் மக்களுக்குக் கூறவேண்டும். இதன் மூலம் திருச்சபைகள் அரசாங்கத்திற்கு எதிரானது என்ற செய்தியினை அவர் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித பிரான்சிஸ் போர்ஜியா (சே. ச.)

குரு - (கி.பி. 1510 - 1572)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் ஸ்பெயின் நாட்டினர். வலென்சியாவைச் சேர்ந்த காண்டியாவில் ஜோன் என்ற பிரபுவின் மூத்த மகனாகப் பிறந்தார். இவர் திருத்தந்தை 6ஆம் அலெக்சாண்டரின் உறவினர். மன்னன் 5ஆம் சார்லஸின் உறவினரும் ஆவார். அரச அவையிலே கல்வி கற்றார். 19ஆவது வயதில் திருமண வாழ்வில் ஈடுபட்டார். 8 குழந்தைகளின் தந்தையானார். மன்னன் 5ஆம் சார்லஸ் அரச அவையில் பிரான்சிசுக்கு உயர்ந்த மதிப்புக் கொடுத்து நடத்தி வந்தார்.

ஒருமுறை பிரான்சிஸ் உரோமை சென்றிருந்த சமயம் அரசி இசபெல்லா திடீரெனக் காலமாகிவிட்டார். இவ்வரசி மிகவும் அழகானவர். தகவல் அறிந்து பிரான்சிஸ் நாடு திரும்பினார். அரச அவைக்கு விரைந்து சென்றார். அங்கு உருக்குலைந்த அரசியின் உடலைக்கண்டு அதிர்ச்சி அடைந்தார். இக்காட்சியே, உலக மகிமை எத்துணை நிலையற்றது என்று உணர்ந்து, மாமன்னர் கிறிஸ்துவுக்கே எனது பணி என்று உறுதி எடுத்துக்கொண்டு, சேசு சபையில் சேர்வதற்குக் காரணமாயிற்று.

தம் துணைவியாரின் மறைவுக்குப்பின் தம் பட்டங்கள், செல்வம் அனைத்தையும் துறந்தார். 1-2-1548இல் உற்றார் உறவினருக்குத் தெரியாமல் சேசு சபையில் தனது முதல் வார்த்தைப்பாட்டை அளித்தார். 1550 இல் இறையியலில் முனைவர் பட்டம் பெற்றார்.

பின்னர் மறைக்கலை பயின்று கி.பி.1551ஆம் ஆண்டு குருவானார். பின்னர் இயேசு சபையிற் சேர்ந்தார். அச்சபையின் மூன்றாம் தலைவராக நியமனம் பெற்றார். இளந்தளிராயிருந்த சபையைப் பல வழிகளிலும் பேணி வளர்த்து விரிவுபடுத்தினார்.

குருமாணவர்களின் ஆன்மீக வாழ்வுக்குப் பெரியதோர் சிறப்பிடம் அளித்தார். ஸ்பெயின், பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளில் 31 புதிய இயேசு சபைக் கல்லூரிகள் தோன்ற வழிவகுத்தார். மறைபரப்புப் பணியைப் பொறுத்த மட்டில் மெக்சிக்கோ, பெரு, கிரீட் தீவு போன்ற நாடுகளில் இயேசு சபையினர் தங்கள் குருதியைச் சிந்திக் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தனர்.

தம் ஆன்மீக வாழ்வின் அடித்தளத்தினின்று அவர் கூறிவந்த அறிவுரை: "நாம் பயணிகள். மூவித உறுதிமொழிகள் மூலம் நம் கால்களுக்குக் காலணிகளை அணிந்திருக்கின்றோம். இதனால் நாம் விண்ணகம் நோக்கிப் பீடுநடை போட வேண்டும். இறைவனோடு இணைந்த கருவிகளாக நாம் திகழ வேண்டும். இறைவனின் தொண்டில் புனிதமான குறிக்கோள் தேவை. நம் ஆன்மீக முயற்சிகளின் மூலம் இறைவனுடன் நெருங்கிய அறிமுகம் தேவை. இறைவனின் மிகப்பெரும் பெருமையை முன்னிட்டு நமக்கு ஆன்ம இரட்சணிய ஆவல் தேவை. இவை வழியாக நாம் நம்மைப் புனிதர்களாக்கிக்கொள்ள இயலும்.

நாம் செபத்திலும், ஆன்மீக முயற்சிகளிலும் சுவையற்றுப் போனால், எல்லாமே உறைந்து போய்விடும். ஏனெனில் ஓர் ஆன்மா தியானிப்பதிலும், சிலுவையில் அறையுண்ட இயேசுவைப்பற்றிச் சிந்திப்பதிலும் கஞ்சத்தனமாக நேரத்தைச் செலவிடுமாயின், வழுக்கல் பாதையில் போவது உறுதியாகிவிடும். எனவே நமது பலவிதமான ஆன்மீக காயங்களைக் குணப்படுத்தச் சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தியானிப்போம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அமதி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 46




# வாசிப்புக் கலாசாரம் வளரட்டும்!

### *சரியான இடைநிறுத்தங்கள் இல்லையேல் மனவருத்தம்தான்!*

அபிரும் அவன் மனைவியும் அயல்வீட்டு தம்பதியினரும் சேர்ந்து, கொண்டாட்டம் ஒன்றிற்குப் போவதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்கள். குறித்த அந்நாள் காலை அயல்வீட்டுப் பெண் அரச அலுவலகம் ஒன்றில் வேலை பார்ப்பதால் அங்கிருந்து அபிருக்கு நான்கு வார்த்தைகளில் சிறிய மின்னஞ்சல் ஒன்றை அனுப்புகிறாள். அதில், "யார்யாரெல்லாம் கொண்டாட்டத்திற்குப் போகயிருக்கிறோம்?" எனக்கேட்டு எழுதுகிறாள். அபிர், "நான் உன் புரிசன் நீ என் மனைவி"எனப் பதில் அனுப்புகிறான்.

இப்பதிலை வாசித்த அப்பெண் அதிர்ச்சியில் உறைந்து போகிறாள். இதனை அவதானித்த அலுவலகத்தில் இருந்த அவளுடைய நண்பி விடயத்தை வினவுகிறாள். பின்பு அவளே மின்னஞ்சலைப் படித்துவிட்டு அதிர்ச்சியில் ஆடிப்போன நண்பிக்கு விளங்கும்படி சொற்களுக்கிடையே இடைநிறுத்தங்களைச் செய்து மின்னஞ்சலை மீண்டும் சரியாக வாசித்துக் காட்டுகிறாள்: "நீ நினைப்பதுபோல,'நான் உன் புருசன், நீ என் மனைவி' என எழுதப்படவில்லை!'நான், உன் புருசன், நீ, என் மனைவி' என்றே நீ புரிந்துகொள்ள வேண்டும்!" என விபரித்து நின்றாள்.

### *விளக்கமாக வாசிக்காவிடில் வில்லங்கந்தான்!*

வாசிப்பதை ⁓ படிப்பதை விளக்கமாகச் சரியாக வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் வில்லங்கத்தில்தான் முடியும் என்பதற்கு மேற்சொன்ன நிகழ்வு ஓர் உதாரணமே. 2012இல் 'திருப்பத்திற்கான தேடல்கள்' என்ற என் நூலை வெளியிட்டிருந்தேன். அதனைப் பெற்றுக்கொண்டவர்களில் ஒருவர் சிலநாட்களின்பின் சந்தித்தபோது, "உங்கட 'திருப்பதிக்கான தேடல்கள்' சுப்பரா இருக்குது பாதர்!" என்றார். அடுத்தகணமே அவரிடம், "திருப்பதியைத் தேடவேண்டிய தேவையில்லை! அப்படித் தேடவேண்டிய தேவையிருந்தால் உங்களுக்குச் சொல்லியனுப்புகிறேன்!" என்று சொன்ன முறையைப் பார்த்து தன்னிலை உணர்ந்தவராக, "மன்னிக்கவேணும்! வாய் தடுமாறி திருப்பத்திற்கான" என்பதை 'திருப்பதிக்கான'எனச் சொல்லி விட்டேன்!" என்றார். "நல்லகாலம், வாய்தான் தடுமாறியிருக்கிறது, மூளை தடுமாறிச் சொல்லவில்லை!" என மனதுக்குள் என் கோபத்தை ஆற்றுப்படுத்திக்கொண்டேன்.

ஒரு நூலினுடைய தலைப்பையே இவ்வாறு வாசிக்கிறார்களே என்றால் நூலினுள் இருக்கும் விடயங்களை எப்படியெல்லாம் கூறுவார்களோ! என்ன செய்வது? இவர்களைப் போன்றவர்களை நகைச்சுவை நடிகர் கவுண்டமணி கூறியதுபோல 'கொக்காமக்கா' என்ற வகைப்படுத்தலுக்குள் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

தலைப்பாக இருந்தாலென்ன நூலின் உள்ளடக்கமாக இருந்தாலென்ன சரியாக விளங்கி வாசிப்பது, பொருள் உணர்ந்து வாசிப்பது, சொற்களுக்கிடையே சரியான இடைநிறுத்தங்களை மேற்கொண்டு வாசிப்பது, வாசிப்பதன் பொருளைக் கண்டுகொள்ள எப்போதும் உதவியாக இருக்கும்.

### *நூல்கள் உயிரூட்டுபவை*

"மனிதனின் கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்தது நூல்கள்" எனக் குறிப்பிடும் அல்பெட் அயன்ஸ்ரையின், நியூட்டனின் பிறின்சிபியா வாசித்ததன் வழியாகத்தான் மீண்டும் பிறந்த அனுபவத்தைப் பெற்றதாகக் கூறுவார். இவ்வனுபவமானது, வாசித்தல் ஒரு மனிதனுடைய வாழ்வில் எத்தகைய ஆழ்ந்த அனுபவத்தைத் தூண்டிவிட்டிருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

இந்த வகையில்தான் அமெரிக்க எழுத்தாளரான கில்பர் வைறயாத் என்பவரின் அனுபவமும் அமைந்துவிடுகிறது. அவர் கூறுகையில், "நூல்கள் வெறும் காகிதங்களின் குவியல் அல்ல. அவை அலுமாரிகளில் இருந்து நம்மை வழிநடத்திச் செல்லும் உயிரோடு இருக்கும் மனிதர்கள்" என்கின்றார்.

மாட்டின் லூதர் கிங் அவர்களின் சுயசரிதையை வாசித்ததன் வாயிலாக நெல்சன் மண்டேலா, அகிம்சைப் போராளியானதாக அவரே கூறுகிறார். வில் குராண்டின் தத்துவஞானத்தை வாசித்து அறியவந்ததன் மூலம் உளவியல் மேதை சிக்மன் புரொயிட்டின் உலகை, ஆழ்மனம் ஆட்கொண்டதாக சிக்மன் புரொயிட் அவர்களே பின்நாளில் சொல்கிறார். ககனின் சமூகவியல் சிந்தாந்தக் குறிப்புக்கள் அடங்கிய நூல் கால் மாக்ஸ்சின் சிந்தனையைத் தூண்டியதாக அவரே பிற்காலத்தில் எடுத்துக் கூறுகிறார்.



ஆக, நூல்கள் மனிதர்களை வழிநடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்தவை ⁓ திறன் பெற்றவை. நூல்கள் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து மனிதர்களை ஆக்க சக்தியாக மாற்றும் ஆபூர்வ விசை கொண்டவை என்பது பலருடைய அனுபவங்களில் இருந்து தெரியவருகிறது.

### *வாசித்தல் இன்றியமையாதது*

ஆக, வாசித்தல் மனிதனுக்கு இன்றியமையாதது என்றாகிறது. சக்தி நிறைந்த உணவு எப்படி சுகமான மனிதர்களாக வாழவைக்கிறதோ அதுபோல நல்ல வாசிப்பு நல்லறிவோடும், ஆற்றலோடும் நல்லனுபவங்களோடும் மனிதர்களை வாழவைக்கிறது எனலாம். ஐக்கிய நாடுகள் சபை வாசித்தலை மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக வரிசைப்படுத்தாதுவிடினும் மனிதனுக்கு வாசிப்பது அடிப்படையாகின்றது என்பது தெளிவாகிறது.

ஏனெனில் வாசித்தல் மனிதனை மனிதனாக்குகிறது, அதிலும் சில வாசகர்களை வாசிப்பு மாமனிதர்கள் ஆக்குகிறது என்றுகூட நிறுவலாம். மேற்சொன்ன உலகப் பிரசித்திபெற்ற பெரியோர்களும் இன்னும் எத்தனையோ அறிஞர்களும் வாசித்ததால் மிகப்பெரும் ஆளுமைகளை வளர்த்துக்கொண்டவர்கள் என்பது வரலாறு கற்றுத்தருகின்ற மிகப்பெரும் பாடமாகும்.

அதனால்தான், 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்' என்று நம் முன்னோர்கள் அழகாகச் சொல்லிவைத்தார்கள். இச்சிந்தனையை ஆங்கிலத்தில், 'Reading makes man perfect' எனச் சொல்கிறார்கள். இப்பொன்மொழி, தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்ததா அன்றேல் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வந்ததா என்பது ஆய்வுக்குரியது. ஆனால், அவை கற்றுத்தரும் பாடம் ஒன்றே ஒன்றுதான்.

### *வாசிப்பது குறைந்து வருகிறது!*

ஒப்பீட்டளவில் வாசித்தல் குறைவடைந்துவருகிறது என்ற கவலையை இன்று பலரும் வெளிப்படுத்திவருவதை அவதானிக்கலாம். அதற்குக் காரணங்கள் பல இருப்பினும் அவற்றுள் ஒன்று தொடர்புசாதனங்களின் வருகையும் அவற்றின் பெருக்கமும் ஆகும். குறிப்பாக, கையடக்கத் தொலைபேசி, மடிக்கணனி, முகநூல், இணையம், தொலைக்காட்சி போன்றவற்றின் அதீத பயன்பாடும் பாவனையும், இவற்றோடுள்ள அதிக ஈடுபாடும் அதிகநேரத்தை விழுங்கிவிடுவதால் தரமான நூல்களை, இலக்கிய இரசனையுள்ள ஆக்கங்களை வாசித்தல் - படித்தல் போன்ற நற்பழக்கவழக்கங்கள் நலிவடைந்து வருவது ஒருவகையில் துரதிஸ்ரவமானதே.

எனவேதான், நவீன தொடர்புசாதனக் கருவிகளின் பாவனையின் மட்டில் - பயன்பாட்டின் மட்டில் கவனம் எடுப்பது அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடியது. இவ்விடயத்தில், சிறப்பாகப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள்மீது கவனம் செலுத்துவது இந்நாட்களில் கட்டாயமானதும், இன்றியமையாததுமான தேவையாக உருவாகி வருகிறது.

### *மேற்குலகத்தவரிடம் வாசிப்பது இயல்பாக இருந்துவருகிறது*

மேற்குலகத்தவரிடம் இருந்து கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று வாசிப்புப் பழக்கமாகும். பொதுவாக அவர்கள் அனைவரிலும் சிறுவயது தொடக்கம் வாசிப்புப் பழக்கம் இயல்பாக இருந்துவருவதை அவதானிக்கலாம். மேற்குலகத்தவரைப் பார்க்கிறபோது அல்லது புலம்பெயர்ந்திருக்கிற நம்மவர்களின் இரண்டாவது தலைமுறையினர் நம் தேசம் வந்துசெல்கிறபோது இவ்விடயத்தை அவதானிக்கலாம். சும்மா இருக்கிறபோதும், ஓய்வாக இருக்கிறபோதும் அல்லது நேரம் ஒதுக்கியும் வாசிப்பதில் ஈடுபடுகிறார்கள். உண்மையில், பாடசாலைகளிலேயே சிறுவயதுமுதல் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திவிடுகிறார்கள்.

வயதுக்கு ஏற்ப, வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து ஊக்குவிப்பதால் வாசிப்புப் பழக்கத்தை ⁓ வாசிப்புக் கலையினை அவர்கள் வளர்த்தெடுத்து அதனூடாக அவர்கள் வளர்ந்துவருகிறார்கள். மேற்குலகில் நான்கு ஆண்டுகள் வாழக்கிடைத்த காரணத்தினால் இவ்விடயத்தை அவர்களில் கண்டு இவ்வாசிப்புக்கலையின் பயன்பாட்டினை அனுபவிக்கக்கூடியதாக இருந்தது.

### *வாசிப்புக் கலாச்சாரம் உருவாகவேண்டும்*

நம் நாட்டில் வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலிருந்தே மாணவர்களின் வாழ்க்கைமுறையில் உருவாக்கல் திட்டத்தில் சிலநடைமுறைகள் இருந்தாலும் எத்தனை கல்வி அதிகாரிகள் - அதிபர்கள் - ஆசிரியர்கள் - பெற்றோர்கள் இதன்மட்டில் அக்கறை காட்டுகிறார்கள் என்பது மலைபோல் எழுந்து நிற்கும் மிகப்பெரும் கேள்வி!

பொதுவாக, பாடத்திட்டத்தை முடிப்பதும், எப்படியும் தங்கள் பாடசாலையை - கோட்டத்தை - வலயத்தை - மாகாணத்தை முன்னணிக்குக் கொண்டுவந்து (கொண்டு வருவதில் தவறில்லை. கொண்டுவருவதன் நோக்கம்!) தாங்கள் எதிர்பார்க்கிற உயர் நிலைகளை அடைந்துவிடவேண்டும் எனத் துடிக்கிறவர்களிடத்தில், வாசிப்புப்போன்ற நற்பழக்கங்களை மாணவர்கள் மத்தியில் உருவாக்க மேலதிக நேரம் - மேலதிக திட்டம் எப்படி இருக்கப் போகிறது? நூல்களின் பயன்பாடும், நூலகங்களின் பயன்பாடும் பிள்ளைகளுக்கு கல்வி முறையிலேயே கொடுக்கப்படவேண்டும். இதனை எத்தனைபேர் தங்கள் கல்வித் திட்டங்களில் வைத்திருக்கிறார்கள்? தங்கள் துறைக்கு அப்பால் அதாவது பாடத்திட்டத்திற்கு வெளியே தங்கள் இரசனைக்கு ஏற்ப மாணவர்கள் வாசிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுக்கப்படுகிறதா?

முதலில் கல்விப்பணியில் ஈடுபடுகிறவர்களில் எத்தனைபேர் நல்ல வாசகர்களாக இருக்கிறார்கள்? எத்தனைபேர் தங்கள் துறைக்கு அப்பால் சென்று நல்ல நூல்களை வாசிக்கிறார்கள்? சிலர் தங்கள் பாடநூலையே ஒருதடவைகூடப் பார்க்காமல் கற்பிக்கப்போவதும் - அரைத்த மாவையே பல ஆண்டுகளாக அரைத்துக்கொண்டு அதாவது எவ்வகையான புதுப்பித்தலும் செய்யாமல் ஆண்டுக்கணக்காக அதே பாடக்குறிப்புக்களைக் கொடுப்பதும் தொடர்ந்தவண்ணமாகத்தானே இருக்கின்றன!

இது ஒருபுறமிருக்க, "பாடசாலை உள்விவகாரங்கள் எல்லாம் பாடசாலைச் சமூகத்தோடு நேரடியாகச் சம்மந்தப்படாத இவனுக்கு எப்படித் தெரிந்துவிடுகிறது? "எனச் சிலர் யோசிக்கலாம்! சமூக அக்கறை கொண்ட நல்லாசிரியர்கள் - நல்லதிகாரிகள் ஆங்காங்கே இன்னும் இருக்கத்தானே செய்கிறார்கள்! அவர்கள் ஊடாகத்தான் இவையெல்லாம் நம் போன்றவர்களின் காதுகளுக்கு எட்டிவிடுகின்றன. வேறென்ன? யானைக்குக் கரும்புவாய்த்த கதையாகத்தான் நமக்கும் இவைபோன்ற சமூக நல கரிசனைகள் அமைந்து விடுகின்றன.

### *வாசிப்பைத் தூண்ட வழிவகைகள் வேண்டும்*

ஆக, பிள்ளைகள் சிந்தனை செய்து சரியான வழியில் செயற்படக்கூடிய ⁓ வாழக்கூடிய வகையில் இவர்களில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆர்வத்தோடு அவர்களை வாசிக்கத் தூண்டக்கூடிய விடயதானங்களைக் கொண்ட நூல்கள் அதிகமாக வெளிவருவதோடு அவற்றை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

அடிப்படையில் இவர்களிடையே வாசிப்புக் கலையினை உருவாக்கக்கூடிய திட்டங்களும், திட்டங்களை செயற்படுத்தக்கூடிய நடைமுறைகளும் மிகமிக இன்றியமையாதவையாக உள்ளன.

அதேவேளை, வாசிப்பை ஊக்கப்படுத்தத் திட்டங்கள் இருந்தால் மட்டும் போதாது. பிள்ளைகளை இப்பழக்கத்தினுள் ஈடுபடுத்த தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். உதாரணமாக, வாசிப்பு மாதம் என்று ஐப்பசி மாதத்தை ஒதுக்கி, இம்மாதத்தில் மட்டும் அவ்வப்போது ஆங்காங்கே வாசிப்பைப்பற்றிச் சொல்லிவிட்டு, ஏனைய 11 மாதங்களும் 'வாசித்ததை யோசிப்போம்!' என இருந்துவிடமுடியாது.

நூல்களை பெரிய அளவில் தொடக்கத்தில் வாசிக்காவிட்டாலும் முதலில் அவற்றை வாங்கி நேசிக்கும் பழக்கத்தை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவார்களேயானால் வாசிப்புப் பழக்கத்தைத் தோற்றுவிக்க அதுவே முதல் படியாகிவிடும்.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்
anpuomi1970@gmail.com

'விவேகானந்தர் சிந்தனையில் இருந்து..'

## மதம் என்பது வளர்ச்சி பற்றியதே



மதம் என்பது வளர்ச்சி பற்றியது என்பதை உணரவேண்டும். அது வெறும் பொருளற்ற பிதற்றல்கள் அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மனிதன் கடவுளைக் கண்டான். புதரில் கடவுளைக் கண்டார் மோசஸ், மோசஸ் கடவுளைக் கண்டபோது என்ன செய்தாரோ, அது உங்களைக் காப்பாற்றுமா? ஒருவன் கடவுளைக் கண்டதும் உங்களையும் உற்சாகப்படுத்தி அவ்வாறு செய்யும்படி தூண்டலாம். அதற்கும் மேலாக அது உங்களுக்கு உதவி செய்யாது. அதற்குமேல் ஒன்று மில்லை. செல்லும் வழியிலுள்ள கைகட்டிய கம்பங்கள் அவை.


ஒருவன் உண்டால் இன்னொருவனின் பசி தீராது. ஒருவன் கடவுளைக் காண்பது மற்றொரு மனிதனைக் காப்பாற்றாது, நீங்களே கடவுளைக் காணவேண்டும், இப்போது சண்டை எல்லாம் கடவுளுக்கு உடலில் மூன்று தலைகளா? அல்லது ஆறு தலைகளா? என்பது பற்றியே! ஆனால் நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா என்றால் இல்லை. காண முடியும் என்று நம்புவதும் இல்லை. நாம் எவ்வளவு மதிகெட்ட முட்டாள்கள்! நிச்சயமாகப் பைத்தியகாரர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு – சிறப்புக் கட்டுரை

# அர்ப்பணமும் நம்பிக்கை வாழ்வும்





## முன்னுரை

மெழுகுதிரி போன்று தன்னையே பிறர் வாழ்வின் வசந்தத்திற்காக உருக்கிக்கொள்கின்ற வாழ்வு, உப்பைப்போன்று பிறர் வாழ்வு சுவைபட தன்னையே கரைத்துக்கொள்கின்ற வாழ்வு. பஞ்சு போன்று புரையோடிக்கிடக்கின்ற இச்சமுதாயத்தின் புண்களைத் துடைக்கின்ற வாழ்வு! இத்தகைய உயரிய நற்செயல்களுக்கெல்லாம் உறைவிடமும், உற்ற துணையும்தான் இந்தத் துறவற வாழ்வு!

இறைப்பிணைப்பின் அழ்ந்த அனுபவத்தை இன்பமாய் இரசித்து, பணி வாழ்வு என்னும் அச்சினால் வார்க்கப்பட்டு, துணிச்சலோடு மேடு பள்ளங்களைக் கடந்து நிற்கும் மாண்புமிக்க பணிதான் இந்த அர்ப்பண வாழ்வு. தொடக்ககாலத் திருச்சபையில் திருத்தூதர்கள் அனுபவித்தது, அறிவித்தது உயிருள்ள இயேசுவையே. இந்த அனுபவத்தின் படிப்பினையோடு, குழும உணர்வினால் உந்தித்தள்ளப்பட்டு இறையாட்சிப்பணியைத் தன்னலமின்றி இவ்வவனியெல்லாம் பறைசாற்றிட, கடும் பணியாற்றிட தன்னையே தந்ததுதான் அர்ப்பண வாழ்வு. அதே நம்பிக்கைதான் இயேசுவின் வழிதோன்றல்களாகிய நம்மையும் கவர்கின்றது. நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேல் நாம் கொண்ட ஆணித்தரமான நம்பிக்கையினால் வாழ்வை வைரமாக்கும் இந்த அர்ப்பணத்தின் மேன்மையை நாம் ஆய்ந்து அனுபவிப்போம்.

## அர்ப்பண வாழ்வு என்பது;

வசந்தத்தில் வாழ்வதற்கல்ல, மாறாக, கசந்த பணியை செய்வதற்கு விடுக்கப்பட்ட ஓர் உன்னத அழைப்பு. இது ஒரு பலி வாழ்வு. துறவி இறைவனுக்கென்று பலியாவதற்காக உலகினின்று பிரித்துவைக்கப்பட்டவர். இறைவனுக்குச் சேவை புரிவதையே முழுமூச்சாகக் கொண்டு வாழத் தனது ஆளுமை, சக்திகள், செயல்கள் யாவற்றையும் "இறைவனுக்கே சொந்தம்" என்று வாழத்தெரிந்தவர். துறவி என்பவர், இறைவனை அறிந்து ஆராதிக்கவும், இறைவனை முன்னிறுத்தி அவரது பிரசன்னத்திலே வாழவும் அழைக்கப்படுகின்றார். தம்மீது தமது ஆன்மீக வலிமையின்மீது மட்டும் நம்பிக்கைகொண்டு வாழாமல் , கடவுளின் அருகே அமர்ந்து, அவர் திருவுளத்தை ஆய்ந்தறிந்து பயணம் செய்யும் ஓர் வாழ்வாகும். ஆகவே துறவியானவர் இந்த உலகமோ, உறவுகளோ, உடமைகளோ, உயர்ந்தவை அல்ல, இறைவன்தாமே எல்லாம் என்ற உன்னத மனப்பாங்கோடு வாழவேண்டியவர். "ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, என் கிண்ணம் (தி:பா.16) என்று முற்றிலும் உணர்ந்தவர். வாழ்ந்து, அனுபவித்துக் கொண்டாடப்படவேண்டிய விலைமதிப்பில்லாத, எந்த அளவுகோலாலும் அளந்து நிர்ணயிக்க முடியாத நம்பிக்கைப்பயணம் இந்த அர்ப்பணம். துறவு வாழ்வு எப்படிச் சாத்தியம்? என்ற கேள்விக் கணைகளை வேள்வித்தீயாய் மாற்றி, ஒவ்வொரு கணமும் அனுபவித்து கொண்டாடப்படவேண்டிய ஓர் நம்பிக்கைக்குரிய வாழ்வு இது.

## துறவியில் ஒளிரும் நம்பிக்கை

"மகிழ்ந்திருங்கள், மகிழ்வூட்டுங்கள், மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்" இதுவே இன்றைய துறவறம் மேற்கொள்வோரின் உள்ளங்களின் அடிநாதத்தில் ஒலிக்க வேண்டிய வார்த்தைகளாகும். இது துறவிகளுக்கான திருத்தந்தையின் தாரக மந்திரமுமாகும். இறைவன் படைத்த இந்த உலகில், அக்களித்திட, மகிழ்ந்து பாராட்டிட என்றும் ஆனந்த அனுபவம் பெற துறவியர் அழைக்கப்படுகின்றனர். இறைவனின் பணிக்கெனத் தேர்ந்தெடுத்து அழைக்கப்பெற்ற, புனிதமெனப் போற்றிப் புகழப்பட்ட இந்தத் துறவற வாழ்வு, அன்று அழைப்பின் குரலுக்குச் செவிமடுத்து வாழ்ந்த ஆபிரகாம் தொடங்கி இன்றுவரை எத்தனையோ வரலாறுகளையும், புனிதமான அனுபவங்களையும், இறைவனின் ஏகாந்த தரிசனத்தையும் ஆழ்ந்து அனுபவித்த கணக்கற்ற உள்ளங்களை நம்பிக்கையின் சுவடுகளாக நமக்குமுன் நிறுத்துகின்றது. இந்த நம்பிக்கை என்ற அணிகலன்களால் அழகுபடுத்தப்பட்டு தினமும் மகிழ்ந்து கொண்டாடி கடவுளின் சொந்த மக்களாய் "சீயோனே களிகூர்ந்திடு, அக்களித்திடு" என்ற வாழ்த்தொலிக்கு சொந்தக்காரர்களாய் வாழ்ந்திட அழைப்பு விடுக்கின்றது.

ஆகவேதான் தம் திருத்தந்தை துறவிகளைப் பார்த்து, "சோகமான நிலையில் ஒரு புனிதமும் இருப்பதில்லை" என்று கூறி, "நம்பிக்கையற்ற பிறரைப்போல துயர்படாதீர்கள்" (1 தெச 4:13) என்ற பவுலடியாரின் வார்த்தையை மேற்கோள் காட்டுகின்றார். தேய்க்காமல் வைரத்தைப் பட்டைதீட்ட முடியாது. சோதனைகளின்றி மனிதனைச் சீராக்க முடியாது, அர்ப்பணத்தை அர்த்தமாக்க, மலர்ந்த முகமும், வலிமையுள்ள தோளும், நேசம் நிறைந்த கரமும், அன்பு நிறைந்த குரலும்தான் தேவை.

ஆகவே, ஒவ்வொரு துறவியும் நீதி, அமைதி, உண்மை, சாந்தம், கனிவு, மகிழ்ச்சி மற்றும் இறை அன்பை அனைவருக்கும் வழங்கும் நம்பிக்கைச் செய்தியினை எடுத்துச் சொல்பவர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்து இயேசுவின் அடியொற்றி நடக்கும் துறவிகள் காலைக்கடிக்கும் பிரச்சினைகளை நேருக்குநேர் நின்று எதிர்க்கின்ற வீரியம் பெற்று, கண்ணீர் வடிக்கும் ஒவ்வொரு ஜீவனுக்காகவும் கரைந்துருகப் பழக்கப்பட வேண்டும். தனது சுயபிரச்சினைக்கு மட்டுமல்லாது பிறரின் துன்பங்களுக்கும் நம்பிக்கையூட்டும் தோழமையை வளர்க்க முடியுமென்று எண்ண வேண்டும். சிறகுகள் சிதைந்துபோனாலும் வானில் பறப்பதற்கு இயலும் என்ற நம்பிக்கையுடன், கால்கள் வெட்டப்பட்டாலும் ஊன்றுகோலின் உதவியின்றி உலவ முடியும் என்ற துணிவுடன் செல்ல முற்பட வேண்டும். ஏனென்றால் தாங்கிக்கொள்ளவும், வழிநடத்தவும் அழைத்தவரின் தொடர் பராமரிப்பு என்றும் உண்டு.

மனிதனுக்கு வாழ்வில் எவ்வளவோ கனவுகள். ஆனால் எந்தக் கனவிலும் மனிதன் மனிதனாகத் தன்னைக் கனவு காணவில்லை. ஏனென்றால் பயன்படாத முன்சார்பான எண்ணங்கள் கொண்டு பழைய எண்ணங்களுக்கு மெருகூட்டி, சிறிய வலையில் சிக்குண்டு கிடப்பது மனித இயல்பு. ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது ஒருகாரியத்தைச் செய்யும்முன் பலம், பலவீனம் எது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் முடிவு செய்கின்றோம். உருவாக்கியுள்ள நம்பிக்கை அமைப்பு சரியாக அமையாவிடில் மாற்றத்தைக் காண இயலாது.

மண்ணில் வேரோடி வீசும் புயற்காற்றை எதிர்கொள்ளும் மரத்தைப் போன்று வாழ்வின் தோல்விகளை எதிர்கொண்டால் துறவிகளின் வாழ்வில் வெற்றி நிச்சயம். நிழல்களின் ஒப்பந்தங்களைவிட நிஜங்களின் போராட்டங்கள் எனக்குப் பிடிக்கும் என்று வாழத் தெரிந்தவன்தான் அர்ப்பண வாழ்வை வெறும் கானல் நீராய் எதிர்நோக்காமல் மென்மையாய் நம்மை தழுவிச்செல்லும் வசந்தத்தைப் போன்று பரந்து அனைவரையும் மகிழவைக்கும் இறையன்பின் கருவியாக மாறுவான்.

## குழு வாழ்வு நம்பிக்கையின் சான்று

துறவறக் குடும்பம் ஆண்டவரின் பெயரால் ஒன்றிணைந்து கூடுகின்ற மெய்யான குடும்பம். இது இறை பிரசன்னத்தில் மகிழ்ந்து, நம்பிக்கையின் சான்றாகத் திகழ்கின்றது. துறவற வாழ்வு தன் சுய பாதுகாப்பில் வாழ அல்ல, மாறாகத் துன்புறும் மக்களுக்குப் பணிபுரிந்து, குழுமத்தில் சகோதர வாழ்வையும், உறவையும், குழும ஆன்மீகத்தையும், குடும்ப உணர்வையும், பகிரவே தரப்பட்டிருக்கின்றது. இறை வேண்டல், பங்கெடுப்பு, சக்தி, நேரம், திறமை போன்றவற்றை எச்சூழ்நிலையிலும் பகிர்ந்துகொள்ளவும் கீழ்ப்படிதல் உணர்வோடு பணியாற்றவும் அழைக்கப்பட்டுள்ளோம். கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற மூன்று முத்தான நற்செய்தி விழுமியங்கள் தொடர்ந்திடும் துறவற வாழ்வில் நம்பிக்கையின் ஆதாரங்களே. துன்பங்கள், தனிமை, சவால்கள், எதிர்நீச்சல் போட்டு தத்தளிக்கும் உள்ளத்திற்கு நம்பிக்கையே ஆணிவேர்.

ஏழைகளின் உயர்வே துறவிகளின் இலக்காக இருக்க வேண்டும். தேவையில் உள்ளோர், தனிமையில் வாடுவோர், அன்பின்றித் தவிப்போர், ஒதுக்கி ஓரம் கட்டப்பட்டோர், ஆகியோருடைய வாழ்வின் ஏணியாக மாற இந்தத் துறவறம் பயிற்றுவிக்கின்றது. இந்த நவீன உலகில் துறவிகள் வித்தியாசமாக வாழ்வது சாத்தியமான ஒன்றுதான் என்று சவாலான அழைப்பு விடுக்கின்றார் நம் திருத்தந்தை.

அர்ப்பண வாழ்வுக்கு உருவாக்கம் ஒரு கலை வேலைப்பாடு போன்றது. மீண்டும் மீண்டும் அயராத உழைப்பால் பக்குவமாய் கட்டும் சிலந்தி வலைப்பின்னல்போல மிகுந்த அழகிய, ஒருங்கிணைந்த முயற்சி இது. பணி வாழ்வின் வெற்றியைவிட அர்ப்பண வாழ்விற்கு பிரமாணிக்கமாக இருப்பது முக்கியமானது. பாரம் என்று நினைத்தால் தோள்கள் தூக்காது, தூரம் என்று நினைத்தால் கால்கள் நடக்காது. ஆகவே இறையாட்சியின், விழுமியங்களுக்காகவும் மானிட உரிமைகளுக்காகவும் போராடும் ஒவ்வொருவரிலும், ஒவ்வொரு குழுமத்திலும், இயேசு உயிர்க்கிறார் என்ற நம்பிக்கையை நமது வாழ்வாக்குவோம்.

## தியாகத்தின் செம்மல்களாய்....

பற்றற்ற தன்மை, தியாக மனப்பான்மை, மன்னித்து மறக்கும் பண்பு, தாராள மனப்பாங்கு, சாட்சிய வாழ்வு போன்றவை இவ்வுலகை விழித்தெழச்செய்யத் துறவியரிடம் இருக்கவேண்டிய இன்றியமையாப் பண்புகள். துறவற வாழ்வு கவர்ச்சிமிகு வாழ்வு அல்ல. வெற்றியளிக்கக்கூடியது அல்ல. இந்தக்காலத்திற்கு இப்படியொரு வாழ்வு தேவையா என்ற கருத்துக்கள், உயிர்த்துடிப்புள்ள குழுமங்களாய் இளம் உள்ளங்களில் துளிர்க்கச் செய்யும் கருவிகளாக உருவாவதன் வழி.

ஒவ்வொருவரும் தன் உள்இயல்பிலேயே நற்செய்தி அறிவிப்புத் தூதுவர்களாய் இருக்கவேண்டும் என்று வத்திக்கான் சங்கம் அழைப்பு விடுக்கின்றது. இறைத்தன்மையால் நன்மைகள் செய்வதும், நல்லோராய் வாழ்வதும், பிறர் வாழ தன்னைக் கரைப்பதும் துறவறத்திற்கு அவசியமான பண்புகளாகும். துறவற சபை நிறுவுனரின் ஆன்மீகத்தை வாழ்வில் கொண்டு, பயனுறு பணிகளால் இலக்கு மக்களின் இதயங்களில் மட்டுமல்ல, இருக்கும் மக்கள் யாவரின் இதயங்களிலும் குடிபுகுவதே துறவு ஆன்மீகம்.

எளிமை, மாண்பு, மகத்துவம் போன்ற பண்புகள் அனேக மாந்தரைக் கவர்வது மட்டுமல்லாமல் வாழ்வுநெறியைச் செம்மையாக்கவும் உதவுகிறது. ஆசைகளைத் துறப்பதில் அல்ல, அதனைப் புனிதமாக்குவதிலேதான் துறவியின் ஆழ்ந்த ஆன்மீகம் அடங்கியுள்ளது. "புனிதமான எண்ணங்களே ஆன்மீகத்தை ஒளிரவைக்கும்". துறவற வாழ்வு என்பது போதனைகள் அல்ல. பயிற்சியை அனுபவமாக்கி வாழ்ந்துகாட்டுபவர்களைத்தான் இன்றைய உலகு விரும்புகின்றது.

"தனக்கென்று வாழ்பன் தரித்திரன், பிறர்க்கென்று வாழ்பவன் புனிதன்" தியாக தீபங்களாய் மக்கள் பணிக்காய் எம்மையே நாம் கரைத்துக்கொள்வோம். அயரா உழைப்பினால் அல்லல்படும் உள்ளங்களுக்கு பயன்தரும் மரக்கலமாவோம். தியாகத்தின்வழி கிறிஸ்துவின் அன்பை அனுபவிக்கத் தூண்டுவோம்.

## பகிரப்படும் நீதிக்கான அழைப்பு

கிறிஸ்துவுடன் இணைந்து நீதிக்காக, உண்மைக்காக, மனித நேயத்துக்காக, உழைக்கத் துறவிகள் அழைக்கப்படுகின்றனர். தனி மனிதனின் அவலங்களும், சமூகத்தில் வேரறுக்கப்படவேண்டிய தீயசக்திகளின் மாயத்தோற்றங்களும் உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் சவாலாகும். சமூகத்தின் தீமைகளைச் சாகடித்திடவும் அக்கிரமங்களை ஒழித்திடவும் கடவுளின் அழைப்பு எப்போதும் நம் காதில் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நமக்குத்தரும் புதுவாழ்வை புதிய மனநிலையுடன் பிறரிடம் பகிர்ந்து வாழும்போது நாம் துறவிகள் என்பதற்குப் பதில் கிடைக்கின்றது.

***மணமில்லாத பூக்களை யாரும் விரும்புவதில்லை. நிறமில்லாமல் வானவில் இல்லை. அவ்வாறே பகிரப்படாத திறமைகளும், நல்ல பண்புகளும், அறிவாற்றலும் யாருக்கும் எந்தப் பயனையும் பெற்றுத்தராது.***

ஒளியின் மக்களாகத் திகழ, வாழ்வு பகிரப்பட வேண்டும். பாசப்பகிர்வில் உடமைகளும், அன்பும் மட்டும் பகிரப்படுவதில்லை. உள்ளார்ந்த உணர்வுகளும், ஏக்கங்களும், கலக்கங்களும், கண்ணீர்த்துளிகளும், கனவுகளும், வெற்றிகளும், தோல்விகளும், பலமும், பலவீனங்களும், நீதிக்கான போராட்டங்களும், வாழ்வுரிமைக்கான சவால்களும் தேடல்களும் பகிரப்படுகின்றன.

விரலில் அழுக்குப்படியாமல், வியர்வை ஒரு துளியும் சிந்தாமல், கண்களில் நீர் மல்காமல், கால்கள் சோர்ந்து போகாமல், உடல் எந்த ஒரு சிறு வலியையும் உணராமல், கையிருப்பு எதுவும் கரையாமல் வாழ்வதற்கு துறவிகள் அழைக்கப்படவில்லை. மாறாக ஒவ்வொருவரும் நீதியை நிலைநாட்டும் வேட்கைகொண்டு, மக்களின் வாழ்வு வெளிச்சமாய் மாறிட ஓர் இறைவாக்கினராக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை மறக்கக்கூடாது. எச்சூழ்நிலையிலும் துணிச்சலோடும் ஆர்வத்தோடும் பணிபுரியும் உளப்பாங்கை வளர்த்துக்கொள்வோம்.

மனச்சமாதானத்தைப் பெறாமல் மனிதர்களிடம் சமாதானமாய் இருக்க முயலும் எந்த ஒரு முயற்சியும் சூம்பிப்போன காலுக்கு பொன் காலணி பூட்டி நடக்க முயல்வதைப் போன்றதாகவே இருக்கும் என்கிறார் ஜான் பனியன். சாதியத்தால், அடிமைத்தனத்தால், நுகர்வுக் கலாச்சார வெறிகளால், மனிதத்தை மதிக்க மறந்து, கணப்பொழுது இன்பத்திற்காய் உயிரைப் பறிக்கக்கூடத் தயங்காதவர்களுக்கு எதிரே ஓங்கிக் குரல் கொடுக்க அசாத்திய துணிச்சல் வேண்டும். நம்பிக்கையின் நட்சத்திரமாக, வெற்றிபெறத் துடிக்கும் உள்ளங்களுக்கு நல்விடியலாக இருப்போம். இருட்டில் நடக்கும் கால்கள் இடறிவாழாதிருக்கவும், வெட்டி எடுத்தால் விறகாகவும், வெயிலில் சுட்டு எடுத்தாலும் சுறுசுறுப்பாய் அடுப்பெரிக்கப்பயன்படும் விறகைப்போன்று வாழவும், வளரவும் நாம் அழைக்கின்றோம்.

## முடிவுரை

எந்தத் துறவி விழிப்புணர்வுடன் இருந்து தன் அகநிலையைக் கண்டுணர்ந்து சமத்துவம், சகோதரத்துவம், சத்தியம் என்ற போர்வையில் இறைமையை, இறைசக்தியை ஏற்றுத் தானும் சுதந்திரமாய் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பாரோ, அங்கு இயேசு விட்டுச்சென்ற மன அமைதி குடிகொள்ளச் சிறந்த மருந்தாகத் திகழ்கிறார். நம்பிக்கை ஒளியால் அர்ப்பண வாழ்வை அழகாக்க அர்ப்பணிப்பின் கூட்டுமுயற்சியும் புனிதமிக்க வாழ்வுமே திருச்சபைக்கு வித்தாக விருட்சமாக இருந்து அர்ப்பணத்தை வளப்படுத்தட்டும். புனிதமிகு பார்வையினால், மதிப்பீடுகளால் அயராமல் உழைப்போம். நம்பிக்கையின் தீபங்களாவோம்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

\- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## என்ன காலமிது ....?



பல்லுப்போன பாட்டி பஸ்சில் தள்ளாடியபடி
இருக்கை இன்றி நிற்கையிலே
செல்போனும் செவிகளில் இயபோனும்
பாட்டுக்கேட்டபடி இளசுகள் இருக்கிறார்
சொகுசாக இருக்கையில்!

பள்ளி செல்லும் பிள்ளைகூட அறிவுதரும் ஆசானை
கனம்பண்ணும் பழக்கம் கடுகளவேனும் இல்லாத
காலமாச்சு இக்காலம்!

தன் உதிரத்தையே பாலாக ஊட்டிய தாயை
உழைப்பையே வியர்வையாகச் சிந்திய தந்தையை
காலம் உள்ளவரை காவல் தெய்வமாகப் போற்றாது
கடிந்துகொட்டி வாழும் பிள்ளைகளின் காலமிது!

அகிலமதில் எம்மை அறிவுச் சிகரங்களாக
வாழவைத்த தெய்வங்கள் அன்னை, தந்தை!
அன்புக்காக ஏங்கும் இவர்களை அரவணைக்க மனமின்றி
வயோதிபர் இல்லம் வலிந்து அனுப்பிவைக்கும் காலமிது.

அளவுச் சாப்பாட்டுக்காக வரிசையில் தள்ளாடியபடி
வயிற்றில் சுமந்த பிள்ளைக்காக
பிரார்த்தனை செய்யும் பெற்றவர் மனம்தான்
பெருமைகொள்ளும் மனம்!

மகிழ்வுடன் இதை உணர்ந்து உவப்புடன் வாழும்
காலம் வருவது எப்போ?

*லினஸ் குமார், தரம் - 08,*
*மன்/ அடம்பன் ம.ம.வி. அடம்பன்*

## தாய்



விளக்கு ஒன்று அணைந்துபோனால்
வீடு மட்டும் இருள்கின்றது
வீதி விளக்கு அணைந்துபோனால்
சாலை மட்டும் இருள்கின்றது.
மேற்கே சூரியன் மறைந்துபோனால்
பாதி உலகம் இருள்கின்றது.
பெற்ற தாயவள் இறந்துபோனால்
மொத்த உலகமே இருள்கிறது.



தொட்டில் கட்டித் தாலாட்டி - என்னைத்
தூக்கி வளர்த்தவள் என் அன்னை!
தன் வயிற்றைப் பட்டினி போட்டு
பாலூட்டி வளர்த்தவள் என் அன்னை!
முத்தங்கள் கொடுத்தாள் எனக்கு
மதி நுட்பங்கள் ஊட்டினாள்.

கஸ்டங்கள் வந்திட்டபோதிலும்
கனத்திலே மறந்தாள் மாது!
எத்தனை வைரங்கள் சேர்ந்தாலும்
ஈடாகுமா என் தாயின் அன்பிற்கு!

- செ. மேரி ஜெசில்டா, ஞானோதயம், கீரி, மன்னார்.

## நற்கருணை

வார்த்தையின் வசிகரமே வாழ்வழிக்கும் வதிவிடமே
உள்ளக் கதவுகளைத் திறந்து அதனுள்ளே வாழ்வபவரே
உம் பார்வை ஒன்றுபட்டால் பட்டமனம் தெளிவுறுமே
உந்தன் அன்பைப் பொழிந்தால் இந்த உலகம் பொங்குமே...

அகிலத்தில் அன்புருவாய் அமைதியின் அரசனாய்
உன் அடியார் உள்ளமதில் ஊடுருவிச் செல்லும்
பொன்வாளாய் உள்ளத்தில் உறைபவரே
நடுநிலையாளராக நின்று செயற்படுபவரே.

வட்டவடிவில் சாயலாக உருக்கொடுப்பவரே
உத்தமராய் உயிருடன் வசிப்பவரே
மகிமையின் வடிவே பரிசுத்தரே
எல்லாம் அறிந்தவர் நீரல்லவோ?

- A. டெஸ்மன் குரூஸ்,
புனித கிளாராட் சிறிய குருமடம், நீர்கொழும்பு

# கொஞ்சம் சிரிங்க

***மகன் :*** அப்பா இப்பல்லாம் எனக்கு அடிக்கடி வயிறு வலிக்குது... ஏன்னே தெரியல...?
***அப்பா :*** இதுக்குத்தான் ஒழுங்கா சாப்பிடனும்கிறது... வயித்துக்குள்ளே ஒண்ணுமே இல்லைண்ணா இப்படித்தான் அடிக்கடி வயிறு வலிக்கும்.
***மகன் :*** (சிறிது நேரம் அப்பாவை மேலும் கீழும் பார்த்துவிட்டு) அப்ப நீங்க நேற்றுத் தூங்கப்போகும்போது தலை வலிக்குதுன்னு சொன்னீங்களே... அர்த்தம் புரியுது எனக்கு....

.................................................

***டாக்டர் :*** என்ன நடந்தது?
***நோயாளி :*** இரண்டு ரூபாய் குத்தியை விழுங்கிட்டன்.
***டாக்டர் :*** மற்ற டாக்ரரை பாருங்க.
***நோயாளி :*** ஏன் உங்களுக்கு என்ன?
***டாக்டர்:*** நான் ஐந்து ரூபாய் குத்தியை பார்க்கும் வைத்தியர்.

***அப்பா :*** நேத்து ராத்திரி பரீட்சைக்கு படிச்சேன்னு சொன்னாய் உன் ரூம்ல லைட்டே எரியலையே?
***மகன் :*** படிக்குற இன்ட்ரெஸ்ட்ல அதை எல்லாம் நான் கவனிக்கலப்பா!

.................................................

***மனைவி :*** ஏங்க ஒரே கண்ணாடியைப் பார்த்தவண்ணமே இருக்கிறீங்க.
***கணவர் :*** ஆஸ்பத்திரிக்குப் போனேந்தானே.... டொக்டர் உடம்பைக் கவனமாகப் பார்க்கச் சொன்னார் .... அதுதான் நான் கவனமாப் பார்க்கிறேன்.

.................................................

***கணவன் :*** (மனைவியிடம்) இன்றைக்கு நீ ஒரு கறுப்பு நாய்க்கு சோறு வைச்சியா?
***மனைவி: :*** ஆமாங்க ஏன் கேக்கிறீங்க?
***கணவன் :*** தெரு ஓரத்தில் ஒரு கறுப்பு நாய் செத்துக் கிடந்தது அதான் கேட்டன்.
***மனைவி :*** ????

# மன்னா விளம்பரப் பலகை

கடவுளுக்கு பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட, மக்களுக்கு உதவி செய்யும் கைகளே மேலானவை

வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம்தான். கடமையைச் செய்தால் வெற்றி. கடமைக்குச் செய்தால் தோல்வி.

.................................................

உன் எண்ணம் விண்ணைத் தொடவேண்டும் என்றால் உன் வியர்வை மண்ணைத் தொடவேண்டும்.

*- யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்*

தன்னிடம் போதிய அறிவு இல்லாதவனே கடுமையான வார்த்தைகளைப் பிறர்மீது கொட்டுவான். அது அவனுடைய பலவீனத்தின் அடையாளம்.

.................................................

தன்னம்பிக்கைக்கும் தலைக்கனத்துக்கும் நூல் அளவுதான் வித்தியாசம். நமக்கிருந்தா தன்னம்பிக்கை, அடுத்தவனுக்கு இருந்தா தலைக்கனம்.

நான் கூறிய முதல் பொய் ஏனையோருக்குத் தெரியவரும் போது, நான் கூறிய உண்மைகள்கூட சந்தேகத்துக்கு இடமாகிவிடலாம்.

.................................................

அவசியமானவர்களிடம் உண்மையை ஒருபோதும் மறைக்காதே. அவசியமற்றவர்களிடம் உண்மையை மறந்தும்கூட சொல்லிவிடாதே. இரண்டும் உன் உள்ளத்தைக் காயப்படுத்தும்.

*- R.M. துஷாந்தினி, தலைமன்னார் பியர்*

சிரித்துப் பாருங்கள், உங்கள் முகம் உங்களுக்குப் பிடிக்கும்.
சிரிக்கவைத்துப் பருங்கள், உங்கள் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.

## புதிய ஆயராக நியமனம் பெற்றுள்ள அருட்திரு. ஜஸ்ரின் அடிகளாரின் வாழ்வு மற்றும் பணிகள் பற்றிய குறிப்புகள்



அருட்திரு. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் 2007ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு யாழ். ஆயர் நியமனத்தைப் பெறும்வரை 8 ஆண்டுகள் யாழ். மறைமாவட்டத்தின் குருமுதல்வராகப் பணியாற்றியவர். 2008 – 2015 காலப்பகுதியில் குருமுதல்வர் பணியோடு கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

குருத்துவப் பணியில் 40 ஆண்டுகளை 2014ஆம் ஆண்டு நிறைவுசெய்துள்ள ஜஸ்ரின் அடிகளார், தனது பணிக்காலத்தின் 31 ஆண்டுகளைக் கல்விப்பணியிலே குறிப்பாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆற்றி 2001ஆம் ஆண்டு கல்விப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்தார்.

1976ஆம் ஆண்டுமுதல் 1989ஆம் ஆண்டுவரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உபஅதிபராகவும் 1989 முதல் 2002 வரை அதன் அதிபராகவும் பணியாற்றிய இவர், அரச பாடசாலையில் இருந்து தனியார் பாடசாலைக்குப் பணிமாற்றம் பெற்று 2002 முதல் 2007 வரை புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றினார்.

இங்கிலாந்தில் 1986ம் ஆண்டு முதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும் 1979ஆம் ஆண்டு முதல் 1980வரை முதுகலைமாணிப் பட்டத்தையும் இங்கிலாந்திலேயே பெற்ற இவர், 1991ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு I தரத்தைப் பெற்று 1990 – 1994 ஆண்டு காலப்பகுதியில் இளவாலையில் 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபராகப் பணியாற்றியவர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1998ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை பணியாற்றிய இவர், 1982 முதல் 1984 வரை யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். 2003ஆம் ஆண்டுமுதல் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒழுங்காற்றுச் சபைத் தலைவராகவும் 2002ஆம் ஆண்டுமுதல் யாழ். பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளராகவும், பரீட்சையாளராகவும் இன்றுவரை பணியாற்றி வருகின்றார். கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனைச் சபை உறுப்பினராக 2003ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பணியாற்றி வருகிறார்.

1994ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரை இளவாலை மறைக்கோட்டத்தின் 12 பங்குகளின் முதல்வராகப் பணியாற்றிய இவர், அதே காலப்பகுதியில் யாழ். மறைமாவட்ட ஆயரின் பேரவை அங்கத்தவராகப் பணியாற்றிப் பின்னர் அதேபணியை 2007ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுவரை ஆற்றியவர்.

யாழ். மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராக 1992 – 2002 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர், 1992 முதல் 2006 வரை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி மெய்யியற்றுறையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ். மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக்குழுவின் தலைவராக 1981 – 1986ம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியற்றுறையில் 1984 – 1986ம் ஆண்டு காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1999ஆம் ஆண்டு இவர் தனது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடினார்.

1974ஆம் ஆண்டு யாழ். புனித அடைக்கல அன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயத்தில் மறைந்த யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், 1980 – 1985 ஆண்டு காலப் பகுதியில் மாரீசன்கூடல் பங்குத் தந்தையாகவும் 1976 – 1979 ஆண்டு காலப்பகுதியில் இளவாலை புனித அன்னாள் ஆலய உதவிப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றியவர். 1975 – 1976 ஆண்டு காலப்பகுதியில் உருத்திரபுரம் பணித்தளத்தில் பணியாற்றிய இவர், அன்று லோங் தொழில்நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தில் உதவி இயக்குநராகவும் பணியாற்றினார். இவரின் முதல் குருத்துவப் பணி நியமனம் 1974 – 1976 ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி வலைப்பாடு ஆகிய பங்குகளில் அமைந்திருந்தது.

இவர் தனது இறையியல் கல்வியை 1972 – 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா புனே பாப்பிறை குருத்துவக் கல்லூரியில் கற்று இறையியல் இளம் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். இவர் தனது மெய்யியல் கல்வியை 1966 – 1969 ஆண்டு காலப்பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மற்றும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர்.

1948 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை புனித மரியன்னை ஆலயப் பங்கில் பிறந்த ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் 2015ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தின் 8ஆவது ஆயராகப் பொறுப்பேற்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகறை நல்லாயன் இல்லம், கணேசபுரம், வவுனியா

## சுயதொழில் வாய்ப்புப் பயிற்சிகள்

புதிய உதயம் தேடி...
நவீனத்துவம் தேடி...
தொழில் வாய்ப்பு தேடி...காத்திருக்கும் யுவதிகளே
சமகாலத்தில் உங்களுக்கோர்

உன்னதமான வாய்ப்பு!

தேசிய தொழில் திறன்சார் பயிற்சிகள் **(NVQ)**

நடாத்தப்படுகின்றன.

- அழகியற் கலை – Beauty Culture
- தையல் பயிற்சி – Tailoring
- வெதுப்பகம் – Bakery & general cookery
- கணனி கற்கை – computer
- குறுகிய கால பயிற்சிகள். – saree work, paintings, leather work, flower arrangements and other......

தேசிய தகைமைச் சான்றிதழ் **(NVQ)** தரம் பெற்ற அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பெற்ற பாடநெறிகளுக்கமைவான பயிற்சிநெறிகள் வழங்கப்படுகின்றன. அனைத்து பயிற்சிகளும் நவீன தொழிநுட்பத்துடன்கூடிய வசதிகளை கொண்டமைந்துள்ளன.

வாரீர்... பாரீர்... பயிற்சிபெற்று பலனடைவீர்......!

தொடர்புகளுக்கு:

Good Shepherd Convent,
Marakkarampalai Road,
Main Street, Ganesapuram
Vavuniya, Sri Lanka.
Tel :( 91+) 024 3247437



















# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு

03

04

1939



உதிர்வு

23

09

2015

## திரு. வின்சன் டி போல் டலிமா

(இளைப்பாறிய எழுதுவினைஞர்,
சமாதான நீதவான்)

தகவல் :
குடும்பத்தினர்

ஊர் போற்றும் உத்தமராய்
உலகினிலே தான்மிளிர்ந்தார்
யாவர்க்கும் நல்லுதவி நாளுமே நல்கிடுவார்.
சமூகத்தின் உயர்விற்காய்
சாலவும் உழைத்திடுவார்
அன்பாய் எம்மோடு பண்பாய் பேசிடுவார்
மங்களமாய் சிரிக்கின்ற மன்னவனே ஏன் மறைந்தீர்?
புன்னகை பூத்தமுகம் பூரிப்புக் கொண்ட உள்ளம்
எல்லோரதும் கருமங்களிலும் முன்னின்று உழைக்கும் அன்பர்
இல்லையே இன்று இங்கே..... இதயங்கள் வாடுதையா.....
உம்மைப்போல் உத்தமரை உலகிலினிக் காண்போமா!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
***மனைவி, மகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.***

தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்தவரும்,
எல்லோராலும் மதிக்கப்படும் கல்விமானும்,
ஊர்காவற்துறைப் பிரதேச செயலகத்தில்
கடந்தபல வருடங்களாக எழுதுவினைஞராகக்
கடமைபுரிந்து இளைப்பாறியவரும்,
மக்கள் மத்தியில் தன்னுடைய நற்சேவைகளால்
புகழ்பெற்றவருமான மக்கள் சேவகனுக்காக
எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கின்றோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.
பரலோக தந்தையின் பரம அழைப்பில்
பங்குபெறச் சென்றீரோ எம்மையும் நினைத்தருளும்
இயேசுவே குடும்பத்தை ஆறுதல் செய்யும்!
**- தலைமன்னார் மற்றும் ஊர்காவல்துறை மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.159
## தானியேல் 1 - 12, ஓசோா 1 - 7

உங்கள் விடைகளை நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 | ❖ |
| | 03 | 04 | 05 | 06 | | | | | 07 |
| | | | | | | 08 | | ❖ | |
| | | | | ❖ | 09 | 10 | | | |
| | | | | 11 | | | | | |
| | 12 | | | | 13 | | 14 | | |
| | | | | ❖ | 15 | | 16 | | |
| 17 | | | | 18 | | | | 19 | |
| ❖ | 20 | 21 | 22 | | | | | | 23 |
| | | | | | | 24 | | | 25 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. கடவுளின் .......... என்றென்றும் வாழ்த்தப்படுவதாக!
6. பின்னரே ........... அதற்குரிய நிலைக்குத் திரும்பும் என்றார்.
10. யாக்கோபு ........... நாட்டிற்குத் தப்பி ஓடினான்.
11. .............. மறுபடியும் கருவுற்றுப் பெண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்:
18. அவரது ............. என்றுமுள அரசு!
20. உங்களுக்கு மிகுந்த ................. உண்டாவதாக!

### வலமிருந்து இடம்
2. அப்பொழுது ............ ஒருவர் பேசுவதைக் கேட்டேன்.
7. .........., விவேகம் சார்ந்தவற்றில் அரசன் அவர்களோடு கலந்துரையாடினான்.
8. கதிரடிக்கும் களமும், திராட்சைக்கனி பிழியும் ஆலையும் அவர்களுக்கு அளிக்கமாட்டா: ........ திராட்சை இரசமும் இல்லாமல் போகும்.
13. அதன் ..... சிதைக்கப்பட்டு நெருப்புக்கு இரையாக்கப்பட்டது.
23. ........ செய்வதற்காக அவர்கள் தங்கள் கடவுளைவிட்டு அகன்றனர்.
24. அவர் தந்த .......... எத்துணைப் பெரியன!
25. ............ ஆற்றில் நடுவிலிருந்து ஒரு மனிதக் குரல் ஒலித்தது.

### மேலிருந்து கீழ்
1. அதன்பிறகு ...... செய்யப்பட்டவர் குற்றமற்றவராயிருந்தும் கொலைசெய்யப்படுவார்.
3. ஆதலால் நான் அவர்களுக்கு ஒரு .......... போலிருப்பேன்.
4. அப்பொழுது ........... சிலர் தாமே முன்வந்து யூதர்கள்மேல் குற்றம் சாட்டலாயினர்.
5. நீ .......... செய்யத்தொடங்கியபோதே கட்டளை ஒன்று பிறந்தது.
7. ஆனால் ......... உணர்ந்துகொள்வார்கள்.
12. அதன் முதுகில் பறவையின் இறக்கைகள் ............ இருந்தன.
15. இதோ! நிலவுலகின் நடுவில் ........ ஒன்றைக் கண்டேன்.
16. ஆனால் ........... இறைவனோடு இன்னும் நடக்கிறான்.

### கீழிருந்து மேல்
9. இரு கொம்பு உடையதாக நீ கண்ட செம்மறிக்கிடாய் .......... பாரசீகரின் அரசர்களைக் குறிக்கிறது.
14. ............... அறிவில்லாப் போதைப் புறாவைப்போல இருக்கின்றான்.
17. அது என் திண்ணமான ......................
19. லெபனோனைப்போல் அவன் ..................... பரப்புவான்.
21. "ஆனால், ................... நடுவில் தெய்வங்கள் இருத்தலில்லையே"
22. அப்பொழுது ................. விண்ணகக் கடவுளை வாழ்த்திப் போற்றினார்.
23. அவர் ஆற்றிய .............. எத்துணை வலியன!
24. விண்ணகக் கடவுள் உமக்கு .........., ஆற்றல், வலிமை, மாட்சி ஆகியவற்றைத் தந்துள்ளார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 157 சரியான விடைகளை அனுப்பியவர்களில்
பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
சிவானிகா,
சின்னக்கடை வீதி,
மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
தா. விதுசிக்கா,
பெரியகுஞ்சுக்குளம்,
மடுறோட்.

**மூன்றாம் பரிசு:**
சு. கிருஷா,
சிறுத்தோப்பு,
பேசாலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 157ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. யே. அஸ்மிக்கா, சாளம்பன், ஆண்டான்குளம்.
2. ம. டினுஷா மேரி, பெற்றா, மன்னார்.
3. யோ. ஜெயோன்சி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
4. ய. தெபோறா, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
5. ந. ஆன் மயூரிகா, வேப்பங்குளம், வவுனியா.
6. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
7. ம. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
8. செ. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
9. கி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
10. ஆர். பாக்கிய லெட்சுமி, முழங்காவில், பூநகரி.
11. அ. ஞானப்பிரகாசம், முதலைகுத்தி, உயிலங்குளம்.
12. தா. விதுசன், பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
13. இ. ராஜித், வட்டக்கண்டல், மன்னார்.
14. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
15. அக்விதா டேனிவா டெரன்ஸ், மட்டக்களப்பு.
16. J. ராதிகா, சிறிய குருமடவீதி, மன்னார்.
17. M. ஷெரீனா ஷெகானி, இலுப்பைக்கடவை, மன்னார்.
18. கி. டொறிஸ் மீனா, நாச்சிக்குடா, முழங்காவில்.
19. அ. யூஜினா, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
20. ச. சத்தியமலர், 8ம் வட். நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு.
21. ச. கீர்த்திகரன், கன்னாட்டி, வவுனியா.
22. திருமதி. அஜரின் எட்வேர்ட், சூசை. குளம், வவுனியா.
23. ம. நிதர்ஷன், பெற்றா, மன்னார்.
24. பீ. எமர்சன், கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
25. ஸ். கிறிசாந்தன், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
26. றா. மேரி ராஜ்மி டயஸ், அக்னேஸ்புரம், வங்காலை.
27. ஞா. வினோ சர்மி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
28. ஏ. தீப்பிக்கா, இலுப்பைக்டவை, மன்னார்.
29. எஸ். கிறிஸ்ரி டினேஸ், சிறிய குருமடவீதி, மன்னார்.
30. ஆர். எபிசனா பீரிஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
31. ஆர். யூட்சலா, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
32. ஜே. ஆன் நிந்துஷா, பிடாரிகுளம், வவுனியா.
33. யூ. நிசாந்தினி, திருநாவற்குளம், வவுனியா.
34. அ. அனற் நிவேதா, அச்சங்குளம், நானாட்டான்.
35. எஸ். மேஷாக் விதுசன் மிராண்டா, பேசாலை, மன்னார்.
36. டா. யோசேப்பின், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
37. J. வேர்ஜினி சுபாசினி, குழந்தையேசு வீதி, அடம்பன்.
38. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்புத்துறை, சிலாவத்துறை.
39. சா. டெய்சி லியோன், முத்தரிப்புத்துறை.
40. எம். அமலதாஸ், பாப்பாமோட்டை, மன்னார்.
41. அ. டிசாந்தினி, சென்மேரிஸ் வீதி, அடம்பன்.
42. ம. சாலினி, நானாட்டடன், மன்னார்.
43. கமலா கிறிஸ்தோப்பர், பெற்றா, மன்னார்.
44. ராணி அரசரத்தினம், புகையிரதநிலைய வீதி, மன்னார்.
45. ஜெ. ரதி, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
46. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
47. நி. நிரோனி டிமெல், பூவரசங்குளம், வவுணியா.
48. மேசி செல்வநாயகம், முழங்காவில், பூநகரி.
49. லீ. பாலன், பெற்றா, மன்னார்.
50. அ. செபஸ்ரியாம் பிள்ளை, சாளம்பன், ஆண்டான்குளம்.

## புதிய குரு வினோதன் பிரான்சிஸ் குலாஸ்
# வாழ்க்கைக் குறிப்புகள்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், வங்காலைப் பங்கு புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. மனுவேல் முடியப்பு குலாஸ், பிரான்சிஸ் அந்தோனிக்கம் குருஸ் தம்பதிகளின் புதல்வனாக 20.04.1983 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்ப, இடைநிலை, உயர் கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளரான ஆர்ற்றூர் (SDS) ஆகியோரினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், பிலிப்பைன்ஸ் நாட்டில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள லசால் பல்கலைக்கழகத்தில் தனது மெய்யியல் கல்வியையும், கண்டி தேசிய குருமடத்தில் தனது இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

31.10.2015 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்படவுள்ள இவர், நானாட்டான், மற்றும் கண்டி மறைமாவட்டத்தில் உள்ள கடியன்லேன ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டுப் பணியை மேற்கொண்டார்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(20.10.1965 - 20.10.2015)

**திரு. திருமதி. செ. நீக்கிலான் அருளம்மா**

(பெரிய நீலாசேனை, உயிலங்குளம்)

இல்லறம் என்னும் நல்லறப் பந்தலில்
ஆண்டுகள் ஐம்பதை இறையருளால்
இனிதே வாழ்ந்திட்ட எம் பாசமிகு பெற்றோரே!
இந்நாள் வரையில் உம்மைக்காத்திட்ட இறைவனுக்கு
இருகரம் கூப்பி நாம் நவில்கின்றோம் நன்றிகளை!
எங்கள் உயர்வுக்காக நீங்கள் எடுத்த முயற்சிகள்,
தியாகங்களை நன்றியுணர்வோடு
நினைந்துப் பார்க்கின்றோம்.
வாழ்க நலமுடன்! வாழ்க பல்லாண்டு!

பாசமுடன் வாழ்துவோர் : அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## கரு அழிப்பு பாவத்தை மன்னிக்க ......
1ஆம் பக்கத் தொடர்ச்சி

இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள எல்லாக் குருக்களும் ஏற்கனவே இவ் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளபடியால் யூபிலி ஆண்டின் இந்த விதிவிலக்கு இந்நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

இதுபற்றி திருத்தந்தை குறிப்பிடுகையில், கரு அழிப்புப் பாவத்தைச் செய்த எத்தனையோ பெண்களைத் தான் சந்தித்ததாகவும் இக்குற்றத்தைச் செய்துவிட்டு அவர்கள் அனுபவிக்கும் சொல்லொணா வேதனையைத் தன்னால் உணரக்கூடியதாக இருப்பதாகவும், பல பெண்கள் வேறு வழி தெரியாமலேயே இப்பாவத்தைப் புரிகின்றார்கள் என்றும், இறைவனின் இரக்கத்தை அனுபவிக்க அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இன்றைய உலகில் கரு அழிப்பு என்பது தேவையற்றவற்றை தூக்கி எறிந்துவிடுகின்ற கலாச்சாரத்தின் (throw away culture) ஒரு பகுதியாக மாறிவிட்டதென்றும், குழந்தைகளையும் தேவையற்றவர்களாகக் கருதி தூக்கி எறிகின்ற கவலைக்குரிய நிலை தோன்றிவிட்டதாகவும் திருத்தந்தை கூறினார்.

திருச்சபையில் கரு அழிப்பு சாவான பாவமாகவும், இப்பாவத்தைப் புரியும் ஒருவர் திருச்சபையிலிருந்து நீக்கிவைக்கப்படக்கூடிய (excommunication) தண்டனையைப் பெறக்கூடியவரெனவும் கருதப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002029782

# பொதுத் தேர்தலை நிராகரித்த 33 இலட்சம் வாக்காளர்கள்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்பட்டதுடன் 33 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. வேட்பாளர்கள் தொடர்பான நீண்ட வாக்காளர் அட்டை தொடர்பில் தெளிவின்மையே இந்த நிராகரிப்புக்கு காரணமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 4.42 வீதம் அதாவது 5,17,123 வாக்குகளே நிராகரிக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் வாக்களிக்க 15 மில்லியன் (ஒன்றரை கோடி) வாக்காளர்கள் பதிவு பெற்றிருந்தபோதும் 3.3 மில்லியன் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை.

அத்துடன் வேட்பாளர்களின் விருப்புத்தெரிவு தொடர்பில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளும் வாக்காளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தன.

கம்பஹாவில் மாத்திரம் 56 ஆயிரத்து 246 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இதற்கு சுமார் 2 மீற்றர் நீண்ட வாக்காளர் பட்டியலே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலர் கட்சிக்கான வாக்குகளை உரிய முறையில் செலுத்தியபோதும் விருப்புத் தெரிவின்போதே பிழையான அடையாளங்களை இட்டுள்ளனர். பலர் வேண்டுமென்றே வாக்குகளை நிராகரித்துள்ளனர்.

கொழும்பில் மாத்திரம் 43 ஆயிரத்து 372 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இங்கும் விருப்பு வாக்குகளே பிரதான காரணமாகும்.

இதே நேரம் இத்தேர்தலில் வடக்கு, கிழக்கில் 6 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வாக்களிக்காததும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 50ம் ஆண்டு, 31ம் ஆண்டு நினைவு



திரு. அ. இம்மானுவேல் பெர்னாண்டோ
திருமதி. மேரி மார்த்தம்மா பெர்னாண்டோ

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)
(சின்னக்கடை, மன்னார்.)

மலர்வு : 29 - 12 - 1901 மலர்வு : 29 - 07 - 1917
உதிர்வு : 01 - 10 - 1965 உதிர்வு : 01 - 06 - 1984

கருவிலே உருவாக்கினார் பரமன் அவர்
உருக்கொடுத்து உயிர் அளித்து
உருவாக்கி வாழவைத்தீர்கள் எங்களை நீர்.
பெருமையாய் நீவிர் வாழ்ந்த வாழ்வினை
ஒருகணமேனும் நாம் மறவோம்.
அருமையாய் உம்மைப்பேணிடும் பாக்கியம்
பெறவில்லை நாம்.

குருவாய் நீவிர் கற்றுத்தந்த நற்குணங்களை
வரும் சந்ததியும் பெற்று உம்பெயர் சொல்ல
அருளாம் ஆண்டவர் ஆசீர் பொழிய
இருகரம் கூப்பி இறைஞ்சுகின்றோம்.
இருவர் உம் ஆன்மா இறையில் அமைதி அடைவதாக என்றும் உங்கள் நினைவுகளுடன்,

*மகள்மார் - அனற்றா (ஜேர்மனி), பமிலா (மன்னார்), மருமக்கள், பேரன், பேர்த்திமார், பூட்டன்.*

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 05 1957 — உதிர்வு 17 11 2009



### திரு. மோசேஸ் மொத்தம் தர்மதாசன்

(உயிர்த்தராசன்குளம்)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோ.11:25)

நம்பமுடியவில்லை உங்கள் பிரிவை
உங்களை இழந்தது உண்மையா .... நம்பமுடியவில்லை!
காலன் உங்களைக் கவர்ந்து சென்றானோ?
பாதி வழியில் எம்மைத் தவிக்கவிட்டுப் போனதென்ன?
பதிலின்றி நீங்கள் உறங்க பரிதவிக்கும் எம் இதயம்!

இன்னுமோர் உதயம் உண்டானால்
வானில் உதிக்கும் உதயவன்போல்
மீண்டும் எம்மத்தியில் மலர்வீர்களென்று நம்பலாம்.
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற
இனிதாய் நாமும் வேண்டுகிறோம்!

*பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 02 1936 — உதிர்வு 07 10 2013



### திருமதி. செபஸ்ரியாம்பிள்ளை அன்னம்மா

(நானாட்டான்)

ஈரைந்து மாதங்கள் எம்மைக் கருவில் சுமந்த அன்னையே!
நாங்கள் பிறந்த பின்பு எம்மோடு கூடவேயிருந்து
வளரும்போது நல்லது தீயது சொல்லித்தந்து
வெற்றிபெறும்போது எம்முடன் சேர்ந்து சந்தோஷமடைந்தீர்கள்.
எங்கள் தோல்வியின்போது எங்களைத்
தட்டிக்கொடுத்தீர்கள் அம்மா!

அன்று காலனவன் உங்களைக் கடத்திச் சென்றான்!
ஆனால் உங்கள் நினைவுகளை எங்களிடம் இருந்து
கடத்திச்செல்ல அவனால் முடியவில்லை.
அம்மா, அன்றில் இருந்து இன்றுவரை
உங்கள் பிரிவை எண்ணிக் கலங்குகின்றோம்!
ஆண்டவரில் அமைதிகொள்ளுங்கள்!

*பிரிவால் துயருறும்:*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 11 1950 — உதிர்வு 24 10 2014



### திருமதி. அருளப்பு எலிசபேத் குரூஸ்

(காயாக்குழி, முள்ளிக்குளம்)

ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் - அம்மா
உம் நினைவுகள் நீங்குமா?
சிறகினில் போர்த்திக் காத்திட்ட கரிசனை மறக்குமா?

கண்டிப்பும் கருணையும் இரு கண்ணெக்கொண்டு
காத்திட்ட தாயே!
என்றைக்கும் எதற்கும் எப்போதும் ஒப்பில்லை நீயே!

இப்போதும் உன் அதட்டல் ஒலி காதில் ஒலிக்குது
அது இல்லாமல் பேரன் பிள்ளைகள் நெஞ்சம் தவிக்குது!

எப்போதும் எமக்காக மன்றாடும்
தப்போதும் நேராமல் தற்காரும்!

*பிரிவால் துயருறும்:*
*கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*

தகவல்: மகன் அ. வசின்ரன் டயஸ்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 10 1930 — உதிர்வு 12 10 2013



### திரு. ஹென்றி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

(235, தாழ்வுபாடு வீதி, மன்னார்)

கண்ணின் மணிபோலக் காலமெல்லாம் காத்திருந்து
கனிவாக எம்மை உயர்த்தி வாழவைத்தீர்.
மண்ணின் ஒளிவிளக்காய் மாண்புடன் நீர் ஒளிர்ந்து
மாபரனின் மத்தியிலே மிளிர்ந்து நின்றீர்.

எண்ணும் பொழுதிலுங்கள் ஏற்றம் தெரியுதையா
என்றென்றும் எம் இதயம் நிறைந்து நின்றீர்
விண்ணக வாழ்வில் இறைவன் உம்மை இணைத்திடவே
விருப்புடன் அமலனை வேண்டுகின்றோம்.

நெஞ்சம் நிறைந்து நிற்கும் எமதரிய அருமை அப்பா
நேரான பாதைதனில் நிறைவாக வாழ்ந்தவரே
எஞ்சிய காலமெல்லாம் இறையருளில் வாழ்ந்தவரே
என்றும் நீர் இறைவனோடு இணைந்திருக்க வேண்டுகிறோம்.

*பிரிவால் துயருறும் : பாசமுள்ள மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## காணாமற்போகச் ......

8ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் அவ்வாறு நடக்குமா என்பது கேள்விக்குறியே. போர்க்குற்றவாளியான முன்னாள் இராணுவத் தளபதிக்கு பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டமை இதற்குச் சான்றாக உள்ளது. மேலும் ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் டயசுக்கு இராணுவத்தின் முக்கிய அதிகாரி பதவி வழங்கப்பட்டு அவர் காப்பாற்றப்படுகின்றார் எனவும் தெரிவித்தார்.

ஆர்ஜன்ரீனாவில் காணப்பட்டதுபோன்று அதாவது காணாமல் ஆக்கப்படுபவர்களைக் கண்டறிவதற்காகக் குழுக்கள் அமைக்கப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைபோன்று இங்கும் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து சிறுவர்களின் கைவண்ணத்தில் உருவான சித்திரங்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து காணாமற்போகச் செய்யப்பட்டோரின் பெற்றோர்கள், உறவினர்கள் கையொப்பமிட்ட மனு ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் வழங்குவதற்காக மன்னார் பிரஜைகள்குழுத் தலைவர் அருட்பணி. இம்மானுவேல் செபமாலை அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் காணாமற் போகச்செய்யப்பட்டோர் தொடர்பாக விசாரிக்க சர்வதேச விசாரணை வேண்டும் என வற்புறுத்தியதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியப்படுத்தும் வகையில் மனுவைக் கையளித்தனர்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டணம் : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



இல்லறம் எனும் சோலையிலே
பூமணம் கொண்ட நல்லறம்தனில்
இறைபரன் துணையால்
இணைந்தவர்களே!
சுடர்மிகு வண்ணம் ஐம்பதாண்டுதனை
இடர்பல வென்று வாழ்ந்த
எம் தெய்வங்களே!
எந்நாளும் நீங்கள் நலமுடன் வாழ
வாழ்க வளமுடன் என்று
இறையாசீரோடு நீடுழி வாழ்கவென
இனிதுற வாழ்த்துகிறோம்!

வாழ்த்துக்கள் கூறுவோர்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(13.10.1965 - 13.10.2015

**திரு. திருமதி. பிலிப்பு சின்னமலர்** (குழந்தை இயேசு புரம், மன்னார்)

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



இல்லற வாழ்வில்
இனியதோர் பெற்றோராய்
இறைவிசுவாசத்தின் தூண்களாய்
வலிகள் சுமந்தும்
சோரா சுமைதாங்கிகளாய்
மாறா அன்புடன்
மணவாழ்வில் 50 ஆண்டுகளை
இறைபலத்துடன்
குறைவின்றி நிறைவுசெய்யும்
பாசமிகு பெற்றோரை
கரங்கூப்பி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:
பிள்ளைகள்

(24.06.1965 - 24.06.2015

**திரு. திருமதி. பி. சிலுவைராசா, செபமாலையம்மா**

(நவாலி கிழக்கு,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம்)

## உயிர்த்தராசன்குளம் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா

பறப்பாங்கண்டல் பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றான உயிர்த்தராசன் குளம் புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி மாலை பங்குத்தந்தை அருட்பணி. கொட்வின் கமிலஸ் (சணா) தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று, 29ம் திகதி சனி காலையில் 08 சிறார்களுக்கு முதல்நன்மை வழங்கப்பட்டதுடன் மாலை நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றது.

30ம் திகதி திருவிழாத் திருப்பலியினைப் பங்குத்தந்தையுடன் அருட்பணி. தேவராஜா கொடுதோர் அவர்களும், உயிர்த்தராசன்குளம் மண்ணின் மைந்தனும் முதற் குருவாகிய அருட்பணி. இ. நீக்கிலஸ் அவர்களும் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இத்திருவிழாவில் அயல் பங்குமக்களும் வெளிநாட்டு உறவுகளும் பெருமளவில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல் : ஆலய மேய்ப்புப்பணிச் சபையினர்
(இது கட்டணம் செலுத்தப்பட்ட செய்தி)





## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 / 06 / 1988
உதிர்வு: 06 / 10 / 2010

**செல்வன். தவராஜா சில்வஸ்ரன்**

**Agency Development Officer**
**Union assurance - Mannar Branch**
(பனங்கட்டுக்கொட்டு, மேற்கு)

அன்பின் இருப்பிடமே, பாசத்தின் உறைவிடமே!
எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறவில்லை இதய வேதனை!
நித்தமும் உம் பாசம் நிறைந்த நினைவலைகளுடன்
வாழ்வோம். உம் ஆன்ம சாந்திக்காக
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 07 / 01 / 1982
உதிர்வு: 25 / 10 / 2008

**செல்வன். பத்திநாதன் வளன்ராஜ்**

(சகாயறோட், அடம்பன்)

ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்.
மீண்டுமெப்போ காண்போமென
ஏங்கித் தவிக்கின்றன எம் இதயங்கள்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத உன் நினைவுகளோடு
உனது ஆன்ம சாந்திக்காக
இறைவனிடம் வேண்டுவோம்
உன் இரத்தத்தின் இரத்தங்கள்.

உம் பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 16 / 10 / 1953
உதிர்வு: 22 / 08 / 2015

**திருமதி. மரியை றெவ்வல் ஆரோக்கியம் மார்க்**

(வங்காலை)

அம்மா என்ற பொருளுக்கு அர்த்தம் நீதானம்மா!
எம்மை வழிநடத்திக் காத்திட்ட தெய்வமே அம்மா
ஆயிரம் உறவுகள் எம்மைத் தேடி வந்தாலும்
உங்கள் இனிய தாய்மைக்கு ஈடாகுமா?
பக்தியில், பாசத்தில், பண்பினில் எம்மை வளர்த்திட்ட அம்மா!
நித்திய இறைவனோடு சங்கமமாக
உமக்காகச் செபிக்கின்றோம் எப்போதும் அம்மா!

உம் பிரிவால் துயருறும்: அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உற்றார் உறவினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 27 / 10 / 1939
உதிர்வு: 20 / 08 / 2015


**திரு. பேதிரு மரிசால்**

**(புதுக்கமம், உயிலங்குளம்)**

வெண்ணிற ஆடையுடன் பௌர்ணமி நிலவாக
அழகுற நற்பண்புடன் முழுமைக்கு இலக்கணமாய்.
எமக்கு ஒளியூட்டிய உதய சூரியனே!
இன்று உன் ஒளியிழந்து வாடுகின்றோம்
துயர்கடலில் மூழ்கி அழுகின்றோம்
கரைகாணாமல் சோக அலைகள் துரத்தி அடிக்கின்றது.
ஆறாத துயரினால் ஆறாக வடியுதய்யா எம் கண்கள்.
ஆறுதல் தந்திட யாருண்டு ஆண்டவரே உம்மைவிட
இறைமடியில் இளைப்பாறிட எந்நாளும் வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்; குடும்பத்தினர்.

## 09ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 / 05 / 1958
உதிர்வு: 27 / 10 / 2006

**திரு. ஞானப்பிரகாசம் அமிர்தநாதன் (அமுதன்)**

(இல. 114 மில்வீதி, வவுனியா)

வாழும்வரை போராடு என்பதற்கேற்ப
வாழ்ந்த காலம் குறுகியது.
ஏற்றுக்கொண்ட சவால்கள் பலவிதம் - காலம்
குறுகினாலும் பலரை வாழ வைக்கவும்
மற்றவரது மனம் நோகாமல் செயல்படும்
திறனும் உங்களை வெல்ல யாருளர்?

இறைவனின் பார்வையில் அமைதியுடன்
இளைப்பாற என்றும் வேண்டி நிற்கும்
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு, 4ம் ஆண்டு நினைவு





**திருமதி. சந்திரபோஸ் கமலா பேர்னாண்டோ**

மலர்வு : 30-11-1946
உதிர்வு : 27-10-2014

**திரு. மா. கபிரியேல் சந்திரபோஸ் பேர்னாண்டோ**

மலர்வு : 04-06-1940
உதிர்வு : 10-01-2011

அன்பான அம்மாவே! ஆசையுள்ள அப்பாவே!
என்ன துன்பம் தந்தோம் எம்மைவிட்டுச் செல்வதற்கு.
அப்பா அழைத்தாரோ ஆசையாக வான் வீட்டிற்கு
எம்மை எல்லாம் விட்டுச்செல்ல எப்படி மனம் வந்ததம்மா!
இருவரும் ஒன்றிணைந்து எமக்காய் வேண்டிடுவீர்.
அனுதினமும் ஆண்டவரில் வாழவென வேண்டுகின்றோம்

இவர்கள் பிரிவால் துயருறும் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பிறின்ஸ் ஸ்ருடியோ, மன்னார்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org